# நன்னெறி நூல்நயம்

முருகு. சுப்பிரமணியம்

பாரி நிலையம்
59, பிராட்வே • சென்னை-1.

# நன்னெறி நூல்நயம்

முருகு. சுப்பிரமணியம்

பாரி நிலையம்
59, பிராட்வே • சென்னை-1.

முதற்பதிப்பு : 1976
பதிப்பு: உரிமையுடையது

விலை ரூ : 2. 50

மாருதி பிரஸ், 83, பீட்டர்ஸ் ரோடு, சென்னை-14.

# முன்னுரை

சிங்கப்பூர் வானொலியில், தமிழ்ப்பள்ளிக்கூட ஒலிபரப்பில், 17 ஆண்டுகளுக்கு முன்பு நான் தொடர்ச்சியாக நிகழ்த்திய உரைகளின் தொகுப்பே 'நன்னெறி நூல் நயம்' என்னும் இந்நூல். மொத்தம் 10 கட்டுரைகள் இத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. சிறப்பாக, தமிழ்ப்பள்ளி மாணவர்களுக்காக இப்பேச்சுக்கள் எழுதப்பட்டபோதிலும் பொதுவாகத் தமிழ் இலக்கியங்களைப் பயில விரும்புகிற அனைவருக்குமே பயன்படுகின்ற வகையில், நன்னெறிப் பாடல்களுக்கு விளக்கம்தர முயன்றுள்ளேன்.

இந்நூலைப் படிப்பவர்கள், தமிழில் சிறப்பாக அமைந்துள்ள நன்னெறி முதலான நீதி இலக்கியங்கள் அனைத்தையும் படிக்க விருப்பம் கொள்வார்களானால், என்னுடைய இந்த எழுத்து முயற்சி வெற்றி அடைந்ததாக நான் கருதுவேன்.

சிங்கப்பூர் வானொலியில் இப்பேச்சுக்களை நிகழ்த்த எனக்கு ஊக்கமூட்டிய என் கெழுதகை நண்பர் திரு. மெ. திரு. அரசு அவர்களுக்கும், இதனை வெளியிட்ட பாரிநிலையத்தினருக்கும், இச்சமயத்தில் என் நன்றியைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

இங்ஙனம்,

கோலாலம்பூர் 29-2-76

முருகு சுப்பிரமணியன்
ஆசிரியர், 'தமிழ்நேசன்'

# பொருளடக்கம்

# 1

# கை—உதவியின் உறைவிடம்

மனித உடம்பு விந்தையானது; எண்ணுந் தோறும் வியப்புத் தருவது. மனித இயந்திரம் நாடோறும் ஆற்றும் வேலை அறிவியல் வல்லுநர் களையும் திகைக்க வைப்பதாகும். மனித உடம்பில் எத்தனை உறுப்புக்கள்! கண், காது, மூக்கு, தலை, கால், கை, வாய், வயிறு, நாக்கு, பல் இவ்வாறு சொல்லிக் கொண்டே போகலாம். நம் உடம்பு செய்யும் வேலை களைப்பற்றி ஆசிரியர் உங்களுக்குச் சொல்லித் தந்திருப்பார். நம் உடலுக்கு ஒரு நொடிகூட ஓய் வில்லை. 24 மணி நேரமும் அது இயங்கிக்கொண் டிருக்கிறது. அந்த இயக்கம் நின்றால் நாம் உயிரற்ற பிணமாகிவிடுவோம். மூச்சு நின்றால் உயிர் போச்சு. பிறகு மனித உடம்பு செத்த பிணம்.

வாய் பேசுகிறது; காது கேட்கிறது; கை கொடுக் கிறது; கால் நடக்கிறது; கண் பார்க்கிறது! இவை

மாந்தரின் உறுப்புக்கள் இயல்பாகச் செய்யும் பணிகள். இவை இயற்கையாக நடப்பவை; பழகிப் போனவை; யார் தூண்டுதலும் இன்றி நம்மை அறியாமலேயே நிகழும் செயல்கள் இவை அனைத்தும். அதனால்தான் நாம் இவற்றைப்பற்றி எண்ணுவதில்லை.

மனித உறுப்புக்கள் இயங்கும் வகையை ஆழ்ந்து சிந்தித்தால் நாம் பல உண்மைகளை உணர முடியும். மனிதனை இயங்கவைக்கும் உறுப்புக்கள் அவனுக்கு எத்தனையோ துறைகளில் வழிகாட்டும் ஆசான்களாகவும் திகழ்கின்றன. மனிதனுக்கு ஓர் உறுப்புக் குறைந்தாலும் அவன் எவ்வளவு குறையுள்ளவனாகக் கருதப்படுகிறான்! கண் இல்லாதவன் குருடன். அவன் நிலையை எண்ணிப் பாருங்கள். அப்பொழுது கண்ணின் அருமை உங்களுக்குத் தெரியும். கால், கை இல்லாதவர்கள் முடவர்கள். இரங்கத்தக்க அவர்களின் நிலையை நோக்கினால் கை, கால் இரண்டின் பெருமை புரியும் ஊமையர்—செவிடர் இவர்களின் நிலை எத்துணை வருந்தத்தக்கது! அவர்கள் படும் அவதியைப் பார்த்தவர்களுக்குத்தான் நாக்கு, செவி இவற்றின் இன்றியமையாமையும் சிறப்பும் விளங்கும். மனித உடலில் ஒவ்வொரு சிறு உறுப்பும் இன்றியமையாதது! இரண்டு கைகள், பத்து விரல்கள். அதில் சுண்டுவிரல் ஒன்றேயொன்று இல்லாவிட்டாலும் அந்த மனிதனுக்குக் குறை குறைதான்!

**ஆராய்கிறது அறிவியல் உலகம்**

மனித உடலை அக்கு வேறு ஆணி வேறாகப் பிரித்து ஆராய்கிறது இன்றைய அறிவியல் உலகம்.

மனித உடலின் அமைப்பைக் கண்டு மலேத்து நிற்கின்றனர் உடற்கூறு வல்லுநர்கள். நம் பழந்தமிழ்ப் புலவர்களும் உடலுறுப்புக்களின் இயல்பை நுணுகி ஆராய்ந்திருக்கிறார்கள். கண்ணேப்பற்றியும் கையைப் பற்றியும் மற்றுமுள்ள உடலுறுப்புக்களேப்பற்றியும் பல அருமையான பாடல்களேத் தமிழ் இலக்கியங்களில் நாம் காணமுடிகிறது.

## நன்னெறி பிறந்த கதை

நன்னெறி உடலுறுப்புக்களின் இயல்பை எடுத்துக் காட்டியிருக்கும் நயம் நிணேந்து நிணேந்து மகிழத் தக்கதாகும். நூல் நயத்தில் திளேப்பதற்கு முன்பு உங்களுக்கு நன்னெறியைப்பற்றிச் சில சொல்ல விரும்புகின்றேன். துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் இயற்றிய நீதிநூல் நன்னெறி. சிவபிரகாச சுவாமிகள் ஏறக்குறைய இருநூற்றெண்பது ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர். நன்னெறி மிகஅண்மைக் கால நூலாயினும் 12-ம் நூற்றாண்டில் வாழ்ந்த ஔவையாரின் மூதுரையுடனும் நல்வழியுடனும் ஒருசேர வைத்து எண்ணத்தகும் சிறப்பைப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. சிவப்பிரகாச சுவாமிகள் சிறந்த கவிஞர் என்பதனே நன்னெறியில் அவர் இயற்றியிருக்கும் நாற்பது வெண்பாக்கள் மூலம் அறிந்துகொள்ளலாம். இன்னும் பல செய்யுள் நூல்களேயும் அவர் இயற்றியிருக்கிறார்.

நன்னெறியைச் சிவப்பிரகாசர் எழுதியதுபற்றிக் கூறப்படும் வரலாறு சுவையானது. பொம்மபுரத்திற்குப் போயிருந்த காலத்தில் ஒருநாள் அவர்

தனிமையாகக் கடற்கரைக்குச் சென்றிருந்தார். அப்போது நன்னெறி வெண்பாக்கள் நாற்பதையும் கடல் மணற்பரப்பிலே எழுதினார். பிறகு வீடு வந்து அவற்றை ஏட்டில் எழுதிவரும்படி தம் தம்பி கருணைப்பிரகாசரைப் பணித்தார் என்று சொல்லப் படுகிறது. சிவப்பிரகாச சுவாமிகளுக்கு உள்ள பாவியற்றும் புலமைத் திறத்தை இச்செய்தி நமக்கு உரைக்கிறதெனக் கொள்ளலாம்.

### கையின் பெருமை

இனி, நன்னெறியின்சுவைநயத்தில் திளைப்போம். மனித உறுப்புக்களாகிய கண், கை முதலியவற்றின் இயல்பை நன்னெறி ஒன்பது பாக்களில் உரைக் கிறது. அதில் கையைப்பற்றிக் கூறுவது ஒருபாட்டு. அதனைக் காண்போம்.

என்றும் முகமன் இயம்பாதவர் கண்ணுஞ்
சென்று பொருள்கொடுப்பர் தீதற்றோர்—துன்றுசுவை
பூவிற் பொலிகுழலாய்! பூங்கை புகழவோ
நாவிற் குதவும் நயந்து. (1)

கைகளின் வேலைகளைப் பட்டியல் போட்டுப் பாருங்கள். காலையில் படுக்கையைவிட்டு எழுந்தது முதல் இரவு தூங்கச் செல்லும்வரை கை நமக்கு எந்தெந்த வகையில் உதவுகிறதென்று நினைத்துப் பாருங்கள். ஒரு தாளும் எழுதுகோலும் எடுத்து வைத்துக்கொண்டு கரம் ஆற்றும் கருமங்களை வரிசை யாக எழுதுங்கள். எத்தனை எத்தனையோ வேலைகள்! பல் விளக்க, முகம் கழுவ, உதவுவது கை! பள்ளியில் பாடம் எழுதவும் படிக்கும்போது புத்தகத்தை

ஏந்தவும் உதவுவது கை! வருகின்ற பெரியோரைக் கைகூப்பி வரவேற்பது கை! நாம் உண்ணும் உணவை வாய்க்குத் தருவது கை! அந்த உணவை ஆக்குவதும் கையே! நெகிழும் ஆடையைப் பாய்ந் தோடிக்கட்டுவது கை! பிறருக்கு ஊட்டுவது கை! வழங்குவது கை! கை இயற்றும் உதவிகள் கணக்கில் அடங்கா. அவற்றை முற்றும் சொல்வது இயல்வ தன்று. உதவிகளின் பிறப்பிடமாக விளங்குவது கை. உதவிக்கு மறுபெயர் கை என்றும் சொல்லலாம்; பிரதியுபகாரத்திற்கு அதனுல்தான் கைம்மாறு என்று பெயரிட்டனர் போலும்! கையின்றி உதவி யில்லை என்பதே கருத்து. தமிழில் வழங்கும் மரபுச் சொற்களும் இந்த உண்மையையே அறிவுறுத்தும். 'அவனுக்கு ஒரு கை கொடு' என்ருல் அவனுக்கு உதவு என்று பொருள். பேருதவி புரிந்து—பக்கபல மாக விளங்கிய யாரும் இறந்துவிட்டால் 'அவனுக்கு ஒரு கை போயிற்று' என்று சொல்கிருேம். உதவி, துணைவலிமை, ஆதரவு அனைத்தையும் பிரதிபலிப்பது கை என்பது இதன்மூலம் விளங்கும்.

**கைம்மாறு கருதாது நாவிற்கு உதவுகிறது கை**

நன்னெறியில் சிவப்பிரகாசர் கையின் ஒரே யொரு பணியை மட்டும் எடுத்துக் காட்டுகிருர். நாவிற்குச் சுவையான உணவை எடுத்து ஊட்டுவது கையன்றே! கை இந்தத் திருப்பணியை ஒருநாளைக் குக் குறைந்தது மூன்று நான்கு வேளை நடத்துகிறது. இடையில் குடிக்கும் காப்பி மற்றும் சுவை நீரை நாவிற்கு வழங்குவதும் நம் அருமைக் கரமே!

இதிலென்ன புதுமை இருக்கிறது என்று நினைப்பீர்கள்! வேளைதோறும் கையால் உண்டு உண்டு பழகிப் போய்விட்ட நாம் இதிலுள்ள புதுமையைக் காண்பது அரிதுதான். ஆனால் சிவப்பிரகாசர் பூங்கையின் இச் செயலில் சிறந்த ஒரு பண்பினைக் காண்கிறார். புகழ்ச்சியை விரும்பியோ, வேறு கைம்மாறினை எதிர்பார்த்தோ கை நாவிற்கு இந்த உதவியைச் செய்யவில்லையாம். சுவை மிக்க உணவினை வேளை தவறாமல் நாவிற்குப் படைக்கும் கை எப்பயனையும் நோக்காது அப் பணியைச் செய்து வருகிறதென்பதையே சிவப்பிரகாசர் சுட்டிக்காட்டுகிறார்.

**ஒரு சொல் புகழ்கிறதா?**

வேளை தவறாமல் தனக்கு உணவினைப் படைக்கும் கையைப்பற்றி நாக்கு ஏதாவது ஒரு சொல் புகழ்ந்து பேசுகிறதா, பாராட்டு மொழி பகர்கிறதா என்றால் அதுதான் இல்லை. ஒரு வேளை, ஒரு நேரத்தில்கூட நன்றியுரை பகர்வதில்லை நன்றி கெட்ட இந்த நாக்கு. பிறந்தது முதல் இறக்கும்வரை கையில்லாவிட்டால், சப்புக் கொட்டிக்கொண்டு நாக்கு சுவையான பண்டங்களை எப்படித் தின்ன முடியும்? பிறந்து ஒரு வயது வரை குழந்தைக்குக் கையே சிறந்த உணவாகப் பயன்படுகிறது. சில குழந்தைகள் ஆறு ஏழு வயது வரையில்கூடக் கை விரலைச் சூப்புவதைப் பார்க்கலாம். 'கைப்பால் கலப்பால்' என்னும் பழமொழியும் இதனால்தான் எழுந்தது. இத்தனை உதவி செய்யும் கையினுக்கு நாக்கு எவ்வளவோ கடமைப்பட்டிருக்கிறது!

'கைக்கு எட்டினது வாய்க்கு எட்டவில்லை' என்பார்கள். எதிரே வகைவகையாக அப்பளம் முப்பழம் பாயசத்தோடு உணவுகள் பரிமாறப்பட்டிருந்தாலும் அவற்றை வாய்க்கு எட்டச் செய்வது கைதான்! கரண்டியால் உள்ளே தள்ளுபவர்கள்கூட அந்தக் கரண்டியைப் பிடிக்கக் கையின் தயவையே எதிர்பார்க்க வேண்டும். தாய்மார் ஊட்டி உண்ணும் குழந்தைகளும் தாய்மாரின் கைகளையே நம்பி வாழ்கின்றன. கையார் வேலை நிறுத்தம் செய்துவிட்டால் ஊறும் நாக்கு உலர்ந்துபோகும்; வயிறு பட்டினி கிடக்க வேண்டும். வயிற்றுக்கு ஈவதில் கை கருமயோகியாக எதனையும் எதிர்பாராது செயலாற்றுகிறதென்பதே இதில் நாம் தெரிந்துகொள்ள வேண்டிய உண்மை. மற்றொன்று நாக்கின் இயல்பு: அது இப்படி இடைவிடாது தனக்கு உதவும் கையினைப் புகழ்ந்து ஒரு வார்த்தைகூடச் சொல்வதில்லை. கை தனக்குச் செய்யும் உதவிக்கு நாக்கு ஒரு பெரிய பாராட்டுக் கூட்டமே நடத்தவேண்டும். ஆனால் கொடுப்பதையெல்லாம் உள்ளே தள்ளுவதைத் தவிர நாக்கு கைக்கு நன்றி செலுத்துவதே இல்லை.

இக்காலத்தில் ஆங்கிலப் பள்ளிகளில் பயிலும் பிள்ளைகள் தொட்டதற்கெல்லாம் நன்றி சொல்வார்கள். என் குழந்தைக்கு நான் நாள்தோறும் பாடம் சொல்லித் தருவேன். பாடம் முடிந்ததும் அப்பாவுக்கு ஒரு 'தெங்க் யூ' போட்டுவிட்டுத்தான் என் அருமை மகள் நகர்வாள். இது மேலைநாட்டு நாகரிகமாயினும் நல்ல பண்பு. ஆனால் அப்பாவுக்குப் பிள்ளை

நொடிக்கு நூறு முறை நன்றி சொல்வதும், அண்ணன் தம்பிக்கு நன்றி சொல்வதும், கணவன் மனைவிக்கு நன்றி சொல்வதும் சற்று மிகையான செயல்களாகவே எனக்குப் பயன்படுகின்றன. ஆனால் அறிமுகம் இல்லாதவர்கள் செய்யும் உதவிக்கு உடனே நன்றி சொல்வது இன்றியமையாதது; அப்பண்பு நம் குழந்தைகளிடம் வளர வேண்டும்.

**பெரியோர் பிரதி உபகாரம்**

**எதிர் பாராது உதவுவர்**

உதவிக்கொண்டே இருக்கும் கையினையும் வாய் திறந்து ஒரு வார்த்தை அதனைப் பாராட்டாத நாக்கினையும் நன்னெறி நமக்குக் காட்டியது. எதற்கு? நம்முடைய உதவும் பண்பை வளர்ப்பதற்காக. குற்றமற்ற பெரியோர்களும் கையினைப்போலவே முகமனை—புகழ்ச்சியை எதிர்பார்க்காமல் உதவுவார்கள். ஒரு வார்த்தை 'நன்றி' என்று சொல்லமாட்டார்கள்; செய்த உதவியைப்பற்றி ஏதும் புகழ்ந்து பேசமாட்டார்கள். அவர்கள் பிறப்பிலேயே அந்தப் பழக்கம் இல்லை. அத்தகைய வாய்பேசா மௌனிகளுக்கும் தாமாகவே சென்று வேண்டிய பொருள்களை வழங்குவராம் பெரியோர்கள்! அவர்கள் கருமயோகிகள்! உதவுவதையே கருமமாகக் கொண்டவர்கள்! கைம்மாறினை எதிர்பார்ப்பதில்லை. முகமனையோ உபசார வார்த்தைகளையோ விரும்புவதில்லை. பிறருடைய தேவையை அறிந்து, அவர்கள் கேட்கக் காத்திராமல், தாமாகவே சென்று கொடுப்பார்கள் அவர்கள்.

கைம்மாறு வேண்டாத கடமையுணர்வுக்குக் மேற்பட்டது இந்தப் பண்பு. கைம்மாறினை விரும் பாதவர்களும் புகழை விரும்புவது இயற்கை. ஈதலின் பயனே இசைபட வாழ்தலாகும். ஈவாருக்கு எஞ்சு வது புகழ். அந்தப் புகழையும் வேண்டாத பேருள் ளம் கைவரப்பெறுவது எளிதன்று. ஆனால் நாவிற்கு நாளும் உதவும் கையின் பண்பினைக் கண்டேனும், அத்தகைய உள்ளத்தைப் பெறும் ஆசையாவது நம் மனத்தில் துளிர்க்கட்டும்.

## ௨

# கண் — இரக்கத்தின் இருப்பிடம்

கண்ணைப்பற்றிச் சிறிது தெரிந்து கொள் வோம். ‘எண் சாண் உடம்புக்குச் சிரசே பிரதானம்’ என்பது பழமொழி. அந்தச் சிரசிலும்—அதாவது தலையிலும்—கண்ணே மனிதனுக்கு—ஏன் எல்லா உயிர்களுக்குமே முதன்மையானது என்று கூறலாம்.

**கண்ணைப் பெரிதும் போற்றுவர்**

கண்ணின் பயன் கண்ணுள்ளவர்களுக்கு அவ் வளவாகத் தெரியாது. கண்ணிழந்த குருடர்களுக்கே அதன் அருமை நன்கு புரியும். நிழலின் அருமை வெயிலில் போனால்தானே விளங்கும்! அரசன் குடி மக்களைத் தன் கண்களைப்போல் பாதுகாக்க வேண் டும் என்று சொல்வார்கள். தாய் தன் குழந்தையைக் கண்போல் காக்கிறாள் என்பார்கள். கண்ணை மக்கள் மிகவும் கவனமாகப் பாதுகாக்கிறார்கள்; பேணுகிறார்

கள் என்னும் உண்மையை இந்த உவமை வழக்கு நமக்குக் காட்டுகிறது.

எந்தத் தாயும் தன் குழந்தையைக் 'கண்ணு வாடா' என்றுதான் அழைப்பாள். தாய் தன் குழந்தையைப் போற்றுகிற அளவு, கண்ணிடம் மாந்தர் கருத்து வைத்திருக்கின்றனர் என்பதையே இப்பேச்சு வழக்கு புலப்படுத்துகின்றது. கண்ணை இழத்தல் பெருந்துன்பம். இழந்த கண்ணைப் பெறுதல் புதையல் கிடைப்பதைப் போன்ற பேரின்பம். 'கண்ணைக் கொடுத்தாயோ, பெண்ணைக் கொடுத்தாயோ?' என்பார்கள். பெற்ற மகளுக்கு ஈடாகக் கண் இங்கே பேசப்படுகிறது.

**கண்ணின் பெருமை பெரிது**

கண்ணின் பெருமை பெரிது. மனிதன் கண்ணால் சாதிக்கும் காரியங்கள் ஆயிரம். 'என் கண்ணுள்ள போதே பிள்ளை—குட்டிகளுக்குக் கல்யாணம் செய்து பார்த்துவிட வேண்டும்' என்று பெரியோர்கள் சொல்வர். கண்ணை உயிராக நினைத்துப் பேசப்படும் சொற்கள் இவை. 'அவன் எனக்குக் கண் போன்றவன்'. இவ்வாறு உயிருக்குயிரான நண்பர்களைக் குறிப்பிடுவது வழக்கம். கண்ணைப் பிடுங்குதல் கடுமையான தண்டனை. இத்தனையும் மனித உறுப்புக்களில் கண்ணுக்குள்ள தனிப்பெரும் சிறப்பை விளக்கும்.

கண்ணின் வேலைகள் யாவை? கண் பார்க்கும் அந்தப் பார்வையில்தான் எத்தனை வகை! குளிர்ந்த பார்வை, கோபப் பார்வை, எரிக்கும் பார்வை .......இன்னும் சொல்லிக்கொண்டே போகலாம்.

கண்ணில்லையேல் உலகம் இல்லை. கண்ணில்லாதவர்களுக்கு உலகம் இருந்து என்ன பயன்? அவர்கள் கதிரவனைக் காண முடியுமா? கடலைக் காண முடியுமா? தண்ணிலவைக் காண முடியுமா? பேசும் பொற்சித்திரங்களான தங்களின் குழந்தைகளைத் தான் காண முடியுமா? ஒன்று, இரண்டா? எந்தப் பொருளையும் அவர்கள் காண முடியாது.

**கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம்**

கண்ணின் மற்றொரு பணி அழுவது, கண்ணீர் விடுவது. கண் இரக்கத்தின் இருப்பிடம். கண்ணைத் திறந்து பார்க்கிறவர்களுக்குத்தான் உலகத்தின் துயரம் தெரியும். புத்தர் அரண்மனையை விட்டு வெளியேறியதால்தான் ஏழை எளியவர்களின் அவல நிலையை உணர முடிந்தது. கண்ணை இறுக மூடிக் கொள்கிறவர்கள் உலகைப்பற்றிக் கவலைப்படாதவர்கள். கண்ணின் இயல்பு இரக்கப்படுவது; அதனால் தான் 'கண்ணோட்டம் இல்லவர் கண்ணிலர்' என்று வள்ளுவர் கூறுகிறார். இரக்கம், அருளுடைமை இல்லையேல் கண்ணிருந்தும் இல்லாத மாதிரிதான்.

கண்ணின் இயல்பு பிறர் துயரம் கண்டு இரங்குவது, கண்ணீர் விடுவது என்று கண்டோம். சிவப்பிரகாசர் தம் நன்னெறியில் கண்ணின் அழுகை பற்றிக் குறிப்பிடுகிறார்.

> **பெரியவர்தம் நோய்போல் பிறர்நோய்கண் டுள்ளம்**
> **எரியின் இழுதாவர் என்க—தெரியிழாய்!**
> **மண்டு பிணியால் வருந்து பிறவுறுப்பைக்**
> **கண்டு கலுழுமே கண்.** (20)

பென்சில் சீவும்போது கத்தி உங்கள் கைவிரலை வெட்டிவிடுகிறதென்று வைத்துக் கொள்ளுங்கள். உடனே இரத்தம் குபீரென்று கொட்டும். அப்பொழுது உங்கள் கண்ணிலும் நீர் ததும்பும். கை விரல்படும் துன்பம் கண்டு கண் அழுகிறதன்றோ! உங்களை உங்கள் தகப்பனார் பிரம்பால் அடிக்கிறார். முதுகிலும் கையிலும் காலிலும் அடிவிழுகிறது. அடி தாங்கமாட்டாமல் அழுகிறீர்கள்! முதுகு, கை, கால் பட்ட துன்பம் கண்டு கண் நீர் சொரிகிறதன்றோ! உடம்பின் எப்பகுதி வாட்டமுற்றாலும் கண் வருந்தும். எந்த உறுப்புக்குக் காயம் நேர்ந்தாலும் கண் கலங்கும். பிணியால் அவதிப்படும் பிற உறுப்புக்களைப் பார்த்துக் கண் துயருறுகிறது, கண்ணீர் விடுகிறது! இது மனித அவயவங்களில் கண்ணுக்கு மட்டுமே உள்ள சிறப்பான பண்பு. பிற உறுப்புக்களுக்கு எது நேர்ந்தால் என்னவென்று கண் கவலைப் படாதிருப்பதில்லை. அவற்றுக்கு வரும் துன்பங்களைத் தன் துன்பமாகக் கருதுகிறது அது.

தொடையில் நறுக்கென்று இரத்தம் வருவது போல் யாராவது கிள்ளிவிட்டால், உங்களுக்குத் தொடையில் வலி தெரிவதற்குள் கண்ணில் நீர் சிந்திவிடும். ‘அம்மா’ என்று வாய்திறந்து அழுவீர்கள். கண்ணின் இரக்க இயல்பு இப்படி அமைந்திருக்கிறது. மனித இயந்திர அமைப்பில் உள்ள விந்தைகளில் ஒன்று இது. கண் அழுவது இயற்கையாக நடக்கும் காரியம். ஆனால், சிவப்பிரகாசர் நமக்கு எடுத்துரைக்கும் விதத்தில்தான் நயமும் அருமையும் இருக்கிறது.

**நெருப்பில் பட்ட நெய்போல**

கண் பிற உறுப்புக்களின் நோய் நொடி கண்டு அழும்; அதுபோலப் பெரியவர்களும் பிறருக்கு வந்த துன்பத்தைத் தமக்கு வந்த துன்பமாகக் கருதி நெருப்பில் பட்ட நெய்போல் மனம் உருகுவரென்று நன்னெறி கூறுகிறது. மிகவும் கருத்துச் செறிந்த பாட்டு. நன்னெறியில் ஒரு முத்து என்றே இதனைச் சொல்லலாம்.

பிறர் துன்பத்தைத் தன் துன்பமாகக் கருதி அதனைப் போக்க முயல்வது நல்லோர் இயல்பு. திருக்குறள் இக்கருத்தை இன்னும் தெளிவாக வலியுறுத்துகிறது.

'அறிவினால் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்றாக் கடை.' (குறள். 315)

பிறர் துன்பங்களைத் தம்முடைய துன்பங்களாகக் கருதாவிட்டல் பெற்ற அறிவினால் கண்ட பயன் என்ன என்று கேட்கிறது குறள்! அறிவாளிகளுக்கு அழகு, பிறர் துன்பங்களைத் தம் துயரங்களாகக் கருதி அவற்றைக் களைய முன்வருவதாகும். அத்தகைய மனப்பண்பைத் தராத அறிவு போற்றப் படுவதற்கு உரியதன்று; அதனை அறிவு என்று சொல்வதே பொருந்தாது என்னலாம்.

'உயிர்களிடத்து இரக்கம் வேணும்' என்று பாரதியார் பாப்பாப் பாட்டில் அறிவுரை கூறுகிறார். 'காக்கை குருவி எங்கள் ஜாதி நீள்கடலும் மலையும் எங்கள் கூட்டம்' என்னும் அளவுக்கு அவர் அன்புடைமை விரிகிறது. 'அன்பின் வழியது உயிர்நிலை',

அருட் செல்வம் செல்வத்துட் செல்வம்', 'ஒத்த தறிவான் உயிர்வாழ்வான்' என்னும் குறள்தொடர்கள் மன்னுயிர்களிடத்து அன்பு காட்டுவது மாந்தரின் பெருங்கடமை என்பதையே சுட்டுகின்றன. 'தன்னைப் போல் பிறனை நினை'க்க வேண்டும். உலகுக்கு வரும் துன்பத்தைத் தன் துயராக எண்ணவேண்டும். அத்தகைய அருளாளர்களே உலகினை வாழவைக்கிறுர்கள். புத்தர், ஏசுநாதர், நபிகள் நாயகம், காந்தியண்ணல் முதலிய பெருமக்கள் உலகைத் தம் அருளாட்சி மூலம் வாழவைத்த உத்தமர்கள். கண்ணின் அருள் இயல்பைத் தங்கள் வாழ்க்கையின் தனிப் பெரும் குறிக்கோளாகக் கொண்டிருந்தவர்கள். அத்தகைய பெரிய உள்ளம் எல்லோர்க்கும் வாய்ப்பது அரிது. ஆனுல் உற்ருர், சுற்றத்தார், அண்டை வீட்டுக்காரர், உள்ளூர்க்காரர், நண்பர் இவர்களின் துயரைத் துடைக்கும் மனப்பண்பை எவரும் எளிதில் உருவாக்கிக் கொள்ளலாம்.

**பிறர்க்கு உதவும் பண்பு வேண்டும்**

மனித உள்ளம் கண் போன்று இயற்கையிலேயே இரங்கும் இயல்புடையது. செயற்கைச் சூழ்நிலைகளே பலரை வன்னெஞ்சர் ஆக்கிவிடுகின்றன. அவர்கள் எதனைக் கண்டும் இரங்குவதில்லை; இரும்பு மனம் பெற்றவர்களாகி விடுகிருர்கள். அவர்களின் கண்களில் ஒரு சொட்டு நீர் கசியாது. கல் நெஞ்சம் செயற்கையானது; நல்லோர் அதை விரும்பார்; உலகமும் கல்நெஞ்சர்களை விரும்பாது.

கண் பிற உறுப்புக்களின் துன்பம் கண்டு கண்ணீர்விடுகிறது. அதுபோன்று பிற உயிர்களின் துயரங்களைக் கண்டு கசிந்துருகும் மனத்தை நாம் பெற வேண்டும். குழந்தைகள் சிறுவயதிலேயே பிறருக்கு இரங்கும் பண்பை வளர்த்துக்கொள்ள வேண்டும். நோய் நொடியால் துன்பப்படுகிறவர்களுக்கு உதவ முன்வர வேண்டும். தெருவில் ஒருவன் காரில் அடிபட்டுக் கிடந்தால் நமக்கென்ன என்று நடப்பது இரும்பு மனம். அடிபட்டுக் கிடக்கும் ஆளுக்கு உடனே ஆவன செய்வது கனிந்த மனம். பள்ளிகளில் நடத்தப்படும் சாரணர் இயக்கங்களில் பிறருக்கு உதவும் இந்தப் பண்பு பெரிதும் வற்புறுத்தப்படும்.

கண் பிற உறுப்புக்களின் நோவு கண்டு அழுகிறது; நாமும் பிற உயிர்கள் படும் இன்னல்களைக் கண்டு மனங்கனிய வேண்டும்; அந்த இன்னல்களைப் போக்க ஆவன புரிய வேண்டும், பெரியோரின் இயல்பு இதுதான்.

# 3

# வாழை — ஈகையின் சிகரம்

'வாழையடி வாழையாக' உங்கள் குலம் தழைக்கட்டும் என்று வாழ்த்துவது உண்டு. பரம்பரை பரம்பரையாக உங்கள் குலம் வாழட்டும் என்பது அதன் பொருள். வாழைக்கு அடி வாழை தோன்றுவது திண்ணம். ஒரு வாழையைச் சுற்றி அடிக் கன்றுகள் சிறிதும் பெரிதுமாகப் பல நிற்றலைக் காணலாம். வாழைமரம் விரைவில் பல்கிவிடும். ஒரு வாழைக்கன்றைக் கொண்டுவந்து தோட்டத்தில் வைத்தால் சில மாதங்களில் பிறருக்கு நாம் கன்றுகள் தாராளமாகத் தருகின்ற அளவுக்கு வாழைக் குலம் பெருகிவிடும். எந்த வாழைக்கும் அடிக்கன்று தோன்றுமல் இருப்பதில்லை. அதுமட்டுமன்று. பல கன்றுகள் ஒவ்வொரு வாழையைச் சுற்றிலும் முளைப்பதும் உறுதி. அதன் பிறகு கன்றுக்குக் கன்று தோன்றியபடியே இருக்கும். அதனுல் வாழைமரம் பரம்பரையற்றுப் போவதில்லை; அதன் குலம் பிள்ளைக்குப்

பிள்ளை, பேரன், கொள்ளுப்பேரன், எள்ளுப்பேரன் என்று தலைமுறை தலைமுறையாகத் தொடர்பு அருத சங்கிலியாக விளங்கி வருகிறது.

எங்கள் வீட்டில் ஏறக்குறைய இருபது ஆண்டுகளுக்கு முன்பு ஒரு செவ்வாழைக்கன்று வைத்தோம்; அந்த வாழைக்கன்று தலைமுறை தலைமுறையாக எங்கள் வீட்டில் வாழ்ந்து வருகிறது; அவ்வாழை தரும் பழத்தை நாங்கள் கடந்த இருபதாண்டுகளாகத் தின்று வருகிறோம். கன்றுக்குக் கீழ் கன்ருக அந்த வாழை தன் தலைமுறையைப் பெருக்கி வருகிறது—ஒவ்வொரு கன்றும் வளர்ந்து மரமாகிக் குலை தள்ளும்; குலை தள்ளியவுடன் வீடெல்லாம் மணக்கும்; சீப்பு சீப்பாகக் கற்கண்டுபோல இனிக்கும் பழம்; வீட்டில் சின்னஞ் சிறுவர்களுக்குச் சில நாட்களுக்கு நல்ல வேட்டை. ஆனல் அந்தக் குலையோடு அந்த மரத்தின் வாழ்வு முடிந்துவிடும். பிறகென்ன? அடுத்த கன்று பெரிய மரமாகி மற்ருெரு குலையைத் தள்ளும். அதன் சுவையும் எல்லோரையும் அள்ளும். பிறகு அடுத்த கன்று....அதற்கடுத்த கன்று....இவ்வாறு வாழையடி வாழையாக அந்தச் செவ்வாழை எங்களுக்குப் பழம் ஊட்டி வருகிறது.

**எல்லாப் பகுதிகளுமே பயன்**

மாந்தர்க்குக் கிடைத்துள்ள சிறந்த மரங்களில் வாழை ஒன்று. அதன் எல்லாப் பகுதிகளுமே பயன் தருவன. வாழைத்தண்டு சுவையான கூட்டுக்கறிக்கு உதவும்; வாழைக்காயை நெய்யில் வறுத்தால் தின்று கொண்டே இருக்கலாம்; வாழைப்பூ மருந்துக்குச்

சமம்; அதன் துவட்டல் தெவிட்டாது. வாழை இலை விருந்தினருக்குத் தங்கத் தாம்பாளம். 'இலை'யென்று சொல்லாமல் வருவோர்க்கெல்லாம் அமுதம் படைக்க உதவுவது அந்த இலைதான்! வாழைப்பழத்தின் பெருமையைச் சொல்ல வேண்டியதில்லை. தம்பி தங்கைகளுக்கெல்லாம் வாழைப்பழம் என்ற பெயரைக் கேட்டவுடனே நாவில் நீர் ஊறும்; வாழைப் பழம் விலையும் குறைவு; பயனும் பெரிது. வாழைப் பழத்தில் இரும்புச் சத்து முதல் எல்லாச் சத்துக்களும் இருப்பதாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இவ்வாறு மனிதர்க்குப் பயன்படவே உடம்பெடுத்தது போல வாழை விளங்குகிறது. பிறந்தது முதல் மாந்தர்க்கு அது பயன் தருகிறது. சாப்பாட்டு வேளையில் வேண்டும்போது வாழைக்கன்றில் நாம் இலை அரிந்து கொள்வதில்லையா? இலை நமக்கு வாழை எப்போதும் தருகின்ற ஒன்று. குலை தள்ளிய பிறகுதான் வாழைக்காய், வாழைப்பூ முதலியவை கிடைக்கும். பிறகு மரத்தை வெட்டினால் வாழைத்தண்டு. வாழையின் அடித் தண்டும் பயனுடையதே. 'அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு' என்னும் குறளடி வாழைக்கு முழுக்க முழுக்கப் பொருந்தும்.

### பிறர்க்குதவி மடிகிறது வாழை

வாழையின் இந்தத் தியாக வாழ்வில் நாம் கூர்ந்து நோக்கத்தக்க ஒருண்மை உண்டு. மாந்தருக்குப் பயன்படுவதற்காகவே பிறந்து மாந்தருக்குப் பயன்படுவதிலேயே தன் வாழ்வையும் முடித்துக் கொள்கிறது. வாழை! வாழையின் சாவு அதன்

குலையில் மறைந்து கிடக்கிறது. குலை தள்ளிவிட்டால் அதற்கு முடிவு காலம் வந்துவிட்டதென்று பொருள். 'மெல்லிய வாழைக்குத் தான் ஈன்ற காய் கூற்றம்' என்னும் மூதுரை அடியும், 'ஒரு வாழைக்கு ஒரு குலை' என்னும் பழமொழியும் இந்த உண்மையை அறிவுறுத்தும். வாழைக்கு எமன், அதன் குலை. தின்னத் தின்னத் தெவிட்டாத அருமையான கனியை மாந்தர்க்கு ஈந்து அதனாலேயே தன் வாழ்வை முடித்துக் கொள்கிறது வாழை. நமக்குச் சுவையான பழக்குலை; வாழைக்கு அது இறுதி நிலை. நமக்கு விருந்து; அதற்குச் சாவு மருந்து. வாழைக்கு மரணம் அதன் ஈகையில் அமைந்துவிட்டது.

### இடைவிடாத ஈகை நற்பணி

இந்த ஈகையும் சாவும் இடைவிடாது வாழையடி வாழையாக நடக்கின்றன. குலை தள்ளுவதால், தாய் வாழைக்கு இறுதி நேர்வதை அடிக் கன்றுகள் கண்ணால் பார்த்துக்கொண்டுதான் இருக்கின்றன. எனினும் தாய் வாழையின் சாவு கன்றுகளின் போக்கில் எந்தவித மாற்றத்தையும் ஏற்படுத்துவதில்லை. கன்றுகளும் தாய் வாழையைப் போலவே குலை தள்ளிப் பழம் நல்கி மடிகின்றன. ஈகையால் தாய் வாழை செத்ததைக் கண்டும் அடிக்கன்றுகள் கனி கொடுப்பதை நிறுத்துவதில்லை. குலை தள்ளி மக்களுக்கு உதவும் நற்பணியை—ஈகையைக் கைவிடுவதில்லை. சிவப்பிரகாசர் தம் நன்னெறியில் இந்த உண்மையை அழகாக எடுத்துரைக்கிறார்:

எந்தைநல் கூர்ந்தான் இரப்பார்க்கீந் தென்றவன்
மைந்தர்தம் ஈகை மறுப்பரோ—பைந்தொடீ!
நின்று பயனுதவி நில்லா அரம்பையின்கீழ்க்
கன்றும் உதவும் கனி (17)

ஈகை பரம்பரைக் குணம் என்னும் உண்மையைச் சுட்டுவதே இப் பாட்டு. வாழையின் ஈகை அதன் தலைமுறைதோறும் நடக்கிறது. குலை தள்ளும் செயலை இடைவிடாது நடத்திவரும் வாழைக்குலம் மாந்தர்க்குக் கனி ஈவதைத் தொடர்ந்து ஆற்றி வருகிறது. எத்தனையோ வாழைகள் குலை தள்ளிக் குலை தள்ளி மடிந்துவிட்டன. எனினும் வாழையின் ஈயும் பண்பு தேயவில்லை; ஓயவில்லை. சாவிற்கு வாழைக் குலத்தின் வள்ளன்மையை நிறுத்தும் ஆற்றல் இல்லை; தாய் வாழை நின்று பயனுதவி இன்று நில்லா நிலையைக் கண்டும், அடிவாழை தன் குலத்தின் அறப் பண்பைக் கைந் நெகிழ விடுவதில்லை. தன் ஈகையால் தனக்குச் சாவு நேரும் என்பதை உணர்ந்தும் வாழைக்கன்று கனி உதவுவதை நிறுத்துவதில்லை; வாழையின் இந்த இயல்பு எண்ணுந்தோறும் வியப்பூட்டுவதாகும். ஈகைக்கும் வள்ளன்மைக்கும் இலக்கணமாக விளங்குகிறது வாழை! தன்னையே வழங்கும் வாழையின் ஈகைப் பண்பு யாரையும் மெய்சிலிர்க்க வைப்பதாகும்.

**ஈகை பரம்பரைப் பண்பு**

வாழைக் குலம் போன்றே பெருமக்களின் குடும்பங்களிலும் ஈகைப் பண்பு தலைமுறை தலைமுறையாக நீடிக்கும் என்று சிவப்பிரகாசர் கூறுகிறார். தந்தை

யைப்போலவே பிள்ளைகளும் ஈகைத் திறத்தில் சிறந்து நிற்பர். தந்தை வள்ளலாயிருந்தார்; பிறருக்கு வாரி வாரிக் கொடுத்தார்; அதன் பயனாக ஏழையானார் என்று கருதிப் பிள்ளைகள் பிறருக்குக் கொடுப்பதை நிறுத்துவதில்லை. நல்ல குடியில் பிறந்தவர்களிடம் ஈகை இயல்பாகவே அமைந்திருக்கும்.

'நகையீகை இன்சொல் இகழாமை நான்கும்
வகையென்ப வாய்மைக் குடிக்கு' (குறள். 933)

என்பது குறள். மெய்யான நற்குடியில் பிறந்தவர்களுக்கு இயற்கையாகவே அமையும் பண்புகளில் ஈகையும் ஒன்று.

'நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்
இல்லையென மாட்டார் இசைந்து'

என்று நல்வழியும் கூறுகிறது. ஈகை பரம்பரைப் பண்பு. கொடையாளிகளின் குடும்பத்தில் பிறருக்கு உதவுகின்ற காரியம், இடைவிடாது, வாழையடி வாழையாக, தலைமுறை தலைமுறையாக நடந்து கொண்டே இருக்கும். வறுமைக்கு அந்த ஈகையை நிறுத்தும் ஆற்றல் இல்லை. தந்தை கொடுத்தான் வறியவனானான்; அதுபோலப் பிள்ளையும் கொடுத்து வறியவனுவானேயொழிய ஒரு போதும் கொடைப் பண்பைக் கைவிடமாட்டான். தந்தை, பிள்ளை, பேரன், இவ்வாறு பரம்பரை பரம்பரையாக இந்த ஈகைப் பண்பு சங்கிலிபோலத் தொடரும்.

**தாய்மையும் சேய்மையும்**

*தாய் வாழை கனி உதவி மாய்ந்தது; எனினும் சேய்வாழை கனி தருவதை நிறுத்தல் இல்லை. கனி*

தருகின்ற இந்த ஈகைப் பணி வாழையடி வாழையாக வாழைமரம் இப் புவியில் தோன்றிய நாள் தொட்டு நடந்து வருகிறது. இதனுல் வாழைக்குலத்தை வள்ளல் குலமென்று சொல்லிவிடலாம்.

ஈகையைத் தமிழ் நூல்கள் மிக அழுத்தமாக வலியுறுத்துவது உண்டு, அறமென்று சொல்வதெல்லாம் பெரும்பாலும் ஈகையைத்தான் குறிக்கும். குடிப்பிறப்புக்கு ஈகை ஓர் உரைகல்.

**‘இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்**
**குலனுடையான் கண்ணே உள’** (குறள். 223)

என்னும் குறளும் இக் கருத்தை அரண் செய்வதாகும். ‘கொடுக்க முடியாத நிலையில் சாவும் இனியது’ என்று கூறுவது தமிழ்நெறி. வாழ்க்கையில் ஈகைக்கு அத்துணை உயரிய இடத்தைத் தமிழர்கள் அளித்திருக்கிறுர்கள்.

**‘இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி**
**வேளாண்மை செய்தற் பொருட்டு’** (குறள். 81)

என்னும் குறளில் வள்ளுவர் வலியுறுத்தும் கருத்தும் ‘பிறர்க்கு உதவு, பிறர்க்கு உதவு’ என்பது தான். ஈகை தலைசிறந்த குணம். ஆனுல் ஈகை கரைகாணுது பெருஞ்ல்சலவரையும் சல்லிக் காசில்லாத ஓட்டாண்டியாக்கிவிடும். கொடுத்துக் கெட்டவர்கள் தொகை ஏராளம். ஓட்டைப் பாண்டத்தில் தண்ணீர் தங்காது. அதுபோல வள்ளல்களிடமும் காசு தங்காது. ஆகவே ஈகை வறுமையில் கொண்டுபோய் நிறுத்தும் என்பது தெளிவு. எத்தனையோ வள்ளல்கள் கொடுத்தார்கள், ஏழை

யானுர்கள்! எனினும் ஈகைநலம் மட்டும் அழிவ தில்லை. அது உலகில் என்றும் வாழ்ந்து வரும்.

ஈகைக்கும் வள்ளன்மைக்கும் புலவர்கள் பற்பல உவமைகளையும் சொன்னுர்கள். மழையைச் சிறப் பாகச் சொல்வதுண்டு. எனினும் வாழைக்குலம் ஈகைக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. ஈகையின் மறுவடிவாக வாழை விளங்குகிறதென்றும் சொல் வது இன்னும் பொருத்தமாக இருக்கும். ஈகை என்பது பரம்பரை பரம்பரையாக நிகழும் செயல் என்பதனை வாழையே நமக்கு அறிவுறுத்துகிறது. மாந் தர்க்குத் தன்னையே தந்து ஈகையின் உச்சியை எட்டிப் பிடித்து விடுகிறது வாழை. ஈகை நலத்தைச் சிதைக் கும் வலிமை சாவுக்கும் இல்லை என்பதைக் காட்டு வதும் வாழையே!

பெருங்குடியில் வந்தவர்களும் வாழையைப் போன்றே ஈகையில் சிறந்து நிற்பார்கள். வாழைக் குலம் போன்றே அவர்கள் குடும்பத்தினும் ஈகை பரம்பரைப் பண்பாக மிளிரும். தந்தை ஏழை யானுர் என்று மைந்தர் ஈவதை நிறுத்துவதில்லை; வள்ளன்மைச் சக்கரம் சுழன்றுகொண்டே இருக்கும். வாழையடி வாழையாக உலகத்தை வாழவைப்பது அதுதானே!

# 4

# மேகத்திற்கு ஈகையினல் புகழ்

இப்பொழுது நாம் கடலேயும் மழையையும் பற்றித் தெரிந்த கொள்வோம். மழை உலகுக்கு எவ்வளவு இன்றியமையாதது என்பது உங்களுக்குத் தெரியும். மழை இல்லாவிட்டால் உலகில் வாழ்வே இல்லே. வான்சிறப்பைப் பற்றி வள்ளுவர் பாடியிருக்கும் பத்துக் குறள்களும் மழை மக்களுக்கு அமிழ்தம் என்பதைப் புலப்படுத்தும்.

'விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து
உள்நின்று உடற்றும் பசி.' (குறள். 13)

வானம் பொய்த்தால் வயிறு காயவேண்டியது தான். பசியும் பஞ்சமும் மக்களே வாட்டியெடுக்கும். பசிக்கொடுமைக்குப் பலியான உயிர்கள் எத்தனே?

**தண்ணீர்பட்டபாடு**

மழைத்துளி விழுந்தால் ஆற்றில், ஏரியில், கண்வாயில் எல்லாம் தண்ணீர் கரைபுரளும். நாம்

குடிக்கும் நீருக்கும் பஞ்சம் இராது; பயிர் பருகும் நீருக்கும் பஞ்சம் இராது. வீழும் மழை பயிரை விளையச் செய்து தானிய அறுவடைக்கும் அதன் மூலம் நம் வயிற்றுச் சோற்றுக்கும் வகை செய்கிறது. ஆகவே மழைக்கு நாம் என்றும் நன்றியுடையவர்களாக இருக்கவேண்டும்.

மலேசியாவில் மழை, தண்ணீர்பட்டபாடு. காலையில் கொளுத்தும் வெயில். பகலில் கொட்டும் மழை. பிறகு மாலையில் மீண்டும் பொசுக்கும் வெப்பம். மழைக்கு இங்கு மக்கள் தவமிருக்க வேண்டியதில்லை. அறநெறியில் ஆளப்படும் நாட்டில் மாதம் மும்மாரி பெய்யும் என்பது தமிழர் நம்பிக்கை. மாதம் முப்பது நாளும் மாரி பெய்கின்ற காட்சியை நாம் இந்நாட்டில் காண்கிறோம். அதனால் மழையின் அருமை நமக்கு அவ்வளவாகத் தெரிவதில்லை. இங்கும் சில சமயங்களில் தொடர்ந்தாற்போல் பல நாட்களுக்கு மழை பெய்யாமல் இருந்து விடுகிறது. அப்போது நாம் படுகிற அவதி பெரிது. மழை பெய்யாதா என்று ஒவ்வொரு வினாடியும் வானத்தைப் பார்த்துப் புழுங்கிக் கொண்டிருப்போம். சிலநாட்கள் மழை பெய்யாவிட்டாலே, நாம் இங்கு இத்துணை சள்ளைப்படுகிறோம். ஆனால் தமிழகத்தில் மழை அரிதாகவே பெய்யும். எப்போதோ சில மாதங்களில் மழையைக் காணமுடியும். மற்ற நாளெல்லாம் மாதக்கணக்கில் வெயிலைஅனுபவித்துக் கொண்டிருக்க வேண்டியதுதான். அப்படிப்பட்ட சூழ்நிலையில் மழை அமிழ்தமாகக் கருதப்படுவதில் வியப்

பில்லே. 'மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்' என்று இளங்கோவடிகள் தம் சிலப்பதிகாரத்தில் போற்றிப் பாடியதும் இயற்கைதானே.

**மழையின் பயன்**

மழை என்றால் குழந்தைகளுக்குக் கொண்டாட்டம். மழையில் ஓடியாடித் திரிவதில் பிள்ளைகளுக்குத் தனி ஆர்வம். மழை நீரில் நடந்து செல்வதில் அவர்களுக்கு ஓர் ஆசை! மழை வெள்ளத்தில் முழங்கால் மட்டத் தண்ணீரில் சிறுவர்கள் கும்மாளமடிப்பதை எவரும் பார்க்கலாம். மழை என்றாலே சிறுவர்க்கு மட்டுமின்றிப் பெரியவருக்கும் இன்பம் சுரக்கும். மழை, நான் முதலில் கூறியவாறு நம் சோற்றுக்கு அடிப்படை; அதுமட்டுமின்றி வெப்பத்தைத் தணிக்கின்ற நற்பணியையும் அது செய்கிறது. மழையால் இன்னும் எத்தனை எத்தனையோ பயன்கள் உண்டு.

மழையின் பெருமைகளை இந்த அளவில் நிறுத்தி கொண்டு அது எவ்வாறு பெய்கிறதென்று காண்போம். சூரிய வெப்பத்தால் கடல்நீர் ஆவியாகிப் பிறகு மேகமாகிறது. குளிர்ந்த காற்றுப்பட்டவுடன் அந்த மேகம் மழையாகப் பொழிகிறது. இச்செய்தி மாணவர்களாகிய உங்களுக்குத் தெரியும். ஆகவே கடல் நீர்தான் மறைமுகமாக மழையாக நமக்குக் கிடைக்கிறது.

**எதற்கும் பயன்படாது கடல்நீர்**

கடல் நீரைப் பொறுத்தவரையில் அது உடம்பைக் கழுவக்கூடப் பயன்படாது. கடல்நீர்

குளிக்க, குடிக்க எதற்கும் பயன்படாது. கடல் உலகையே சுற்றி வளைத்திருக்கிறது. விரிவுக்குக் கடலையே உவமை சொல்வார்கள். எனினும் அத் தகைய மாபெரும் கடலின் நீர் மாந்தர்க்குத் துளியும் பயன்படுவதில்லை. ஊர் நடுவே நச்சு மரம் பழுத்து என்ன பயன்? 'கடல் நீர் நிறைந்தென்ன? காஞ்சிரை பழுத்தென்ன?' என்பது பழமொழி. கடலின் உதவாத வெற்று நிலையையே இப்பழமொழி சுட்டு கிறது. ஆனால் இந்தக் கடல் நீரையே மேகம் மொண்டு நமக்கு மழையாகப் பெய்து பெரும்பயனைச் செய்து விடுகிறது. மழை வடிவில் நமக்குக் கிடைப் பது கடல்நீரே எனினும், நாம் கடலைப் புகழ்வதில்லை. மேகத்தையே பாராட்டுகிறோம்.

**மழையின் மாண்பு**

இந்த உண்மையை நன்னெறியில் சிவப்பிரகாசர் தெளிவாக எடுத்துரைக்கிறார்.

பிறர்க்குதவி செய்யார் பெருஞ்செல்வம் வேறு
பிறர்க்குதவி ஆக்குபவர் பேறும்—பிறர்க்குதவி
செய்யாக் கருங்கடல்நீர் சென்று புயல்முகந்து
பொய்யாக் கொடுக்கும் பிறர்க்கு. (4)

கடல் நீரே மேகத்தின் வழியாக நமக்கு மழை யாகப் பெய்கிறது. எனினும் பெருமை, புகழெல் லாம் நமக்கு அந்தக் கடல் நீரை எடுத்து வழங்கும் மேகத்தையே சார்ந்துவிடுகிறது. அதுமட்டுமன்று, வள்ளுவர் கூறும் மற்றோர் உண்மையையும் கவனிக்க வேண்டும்.

'நெடுங்கடலும் தன்னீர்மை குன்றும் தடிந்தெழிலி
தான்நல்கா தாகி விடின்.' (குறள். 17)

மேகம் மழை பொழியாவிட்டால் கடலின் இயல்பான வளமும் குறைந்து போய்விடுமாம். மழைக்கு நீரை வழங்குவது கடல். அந்தக் கடலுக்கே மழை இன்றியமையாதது என்ருல் அதற்கு மேல் இதன் சிறப்பைக் கூற வேண்டியதில்லை.

மழை நீரையும் கடல் நீரையும் ஒப்பிட்டுப் பாருங்கள். மழை நீர் அத்தனையும் பயன். கடல் நீர் கரிக்கும். நீரினுலாகும் பயன்களை அதனுல் நாம் அடைய முடியாது. குளிக்க முடியாது; குடிக்க முடியாது; பயிர்களுக்குப் பாய்ச்ச முடியாது. கடலில் குளிக்க முடியும் என்று தம்பிகள் சிலர் சொல்ல முன் வரக்கூடும். கடலில் குளிக்கலாம்; பிறகு வீட்டில் வந்து குழாய் நீரில் அரை மணி நேரம் குளித்தால் தான் உடம்பில் படிந்த உப்பு மாறும். உடம்பைக் கழுவுவதற்கே குளிப்பது! கடற்குளியலால் வேறு பயன்கள் உண்டெனினும் இந்தப் பயன் கிட்டாது. ஆகவே கடல் நீரைப் பயனற்ற நீரென்று சொல்வதில் தவறில்லை. எதற்கும், யாருக்கும் பயன்படாத கடல் நீரை, எல்லோருக்கும் எல்லாவற்றுக்கும் பயன்படச் செய்து விடுகிறது மழை.

**பணம் காக்கும் பூதங்கள்**

மலைபோல் செல்வம் குவிந்திருக்கும். பிறருக்கு ஒரு காசு ஈயமாட்டார்கள். அத்தகைய ஈயாத உலோபிகளைக் கடல்போன்றவர்கள் என்று நன்னெறி ஒப்பிடுகிறது. அந்தக் கஞ்சப் பிரபுக்களால்

உலகுக்கு என்ன பயன்? அவர்களிடம் கடல் போல் நிறைந்திருக்கும் செல்வத்தால் யாருக்கு நன்மை? நிறைந்திருக்கிறது கடல் நீர்; எனினும் அது எவருக்கும் பயன்படுவதில்லை. நிறைந்திருக்கிறது உலோபிகளிடம் செல்வம்; அது தானும் யாருக்கும் பயன்படுவதில்லை.

'ஈயார் செல்வம் தீயாருக்கு' என்பது நமக்குத் தெரியும். ஈயாதவர்கள், பணம் காக்கும் பூதங்களாக. அதனை இரவு பகல் கண் விழித்துப் பாதுகாப்பர். 'ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்' என்பது கொன்றைவேந்தன். புதைத்து வைக்கின்ற பெரும் செல்வம் பெரும்பாலும் கள்வரிடமோ, குடிகெடுக்கும் பிள்ளைகளிடமோ சிக்குவதையே நாம் காண்கிறோம். அவ்வாறு சீரழியாமல் சிலர் செல்வம் பிறரால் நல்ல செயல்களுக்கு எடுத்து வழங்கப்பட்டு விடுவது உண்டு. தந்தை ஈயாத வன்னெஞ்சராக இருப்பார்; அவர் மாண்டவுடன் அவர் பிள்ளை வள்ளலாக அந்தச் செல்வத்தைப் பிறருக்கு வாரி வழங்கக்கூடும். அந்த நிலையில் செல்வம் தகப்பன் தேடிவைத்ததானாலும் பெயர், புகழெல்லாம் மகனையே சாரும். கடல் நீருக்குச் சேரவேண்டிய பெருமை மேகத்தைச் சார்வது போன்றது இது.

### வழங்குவாரை உலகம் போற்றும்

ஈயாத பெருஞ்செல்வர்கள் கொடுத்து வைக்காதவர்கள். அவர்கள் தங்கள் செல்வத்தை வறியவருக்கு ஈந்து பெரும் புகழைத் தங்கள் காலத்திலேயே ஈட்டிக் கொள்ள முடியும். செவிமணக்கும் சிறந்த

பெயரை அவர்கள் பெறமுடியும். அந்த அருமை யான வாய்ப்பை அவர்கள் இழந்து விடுகிருர்கள். அதாவது செல்வத்திஞல் பெறும் பயனே அவர்கள் அடைவதில்லே. அதுமட்டுமா? அவர்தம் பிள்ளேயோ, வேறு உற்ருர் உறவினரோ அந்தச் செல்வத்தை எடுத்துப் பிறருக்கு வழங்குகிருர்கள். அப்போதும் அவர்களுக்கு அந்தச் செல்வத்திஞல் வரும் புகழ் சேர்வதில்லே. செல்வம் எவருடையது என்று யாரும் கேட்பதில்லே. வழங்குகின்ற வள்ளலேயே வாழ்த்துவார்கள். கடல்நீரை வழங்கி மேகம் பெயர் ஈட்டிக்கொள்வது போன்ற கதைதான் இதுவும்.

ஈகைக்குச் சிறப்புத் தரவே இக்கருத்து வலி யுறுத்தப்படுகிறது. வழங்குகின்ற எண்ணத்தை மக்களுக்கு வளர்க்கவேண்டும் என்பதே சிவப்பிரகா சரின் நோக்கம்.

வாயில் வைக்கமுடியாது உமட்டும் அத்தகைய கடல் நீரை அமிழ்தமாக வழங்கி மேகம் நிலேத்த புகழை ஈட்டி விடுகிறது. ஈகைக்கு மாரி எடுத்துக் காட்டு.

'கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என்ஞற்றும் கொலோ உலகு.' (குறள். 211)

கைம்மாறு எதனேயும் எதிர்பாராது, மழை உல குக்கு அமிழ்தத்தை வழங்கிக் கொண்டே இருக்கிறது. அதற்கு உலகம் என்ன கைம்மாறு செய்யக்கூடும் என்று கேட்கிறது குறள். மழைக்கு உலகமே கடமைப் பட்டிருக்கிறது. இத்தகைய பெரிய ஈகைச் செயலே மழை செய்யக் காரணமாய் நிற்பது கடல் நீர். எனி

னும் அதனை யாரும் புகழ்வதில்லை. அதற்கு ஒரு வார்த்தை நன்றி சொல்வதில்லை. கடலின் நிலை மிகவும் இரங்கத்தக்கநிலை! அதனுடைய நீரைக் கொண்டு பெயரைப் பெற்று விடுகிறது மேகம்.

**ஈவார்மேல் நிற்கும் புகழ்**

மேகம் பெறுகின்ற பெயர் அதற்கு உரியது ஆகாதோ என்ற கேள்வி பிறக்கிறது. இன்னொருவர் பொருளைப் பிறருக்கு வழங்கிப் பெயர் வாங்கிக் கொள்வது வெளிப்படையாகப் பார்க்கும்போது அத்துணை சிறப்பில்லாததாகவேதோன்றும்; 'கடைத் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைப்பது' போன்ற செயலென்றும் இதனை நினைக்கலாம். ஆனால் மேகத்தின் செயலில் தன்னலமில்லை. உலகுக்கு வழங்கவே கடல் நீரை அது முகக்கிறது. இந்தக் காரியத்தை மேகம் செய்யாவிட்டால் உலகுக்கு மழை இல்லை; வாழ்வு இல்லை. பயன்படாமல் கிடக்கிற கடல்நீரை அமிழ்தமாக, மழையாகக் கொட்டுகின்ற பெருஞ்செயலைப் புரியும் மேகத்தை எவர்தான் புகழாதிருக்க முடியும்?

பாசி பிடித்துக் கிடக்கும் செல்வத்தை—ஈயார் பிடியிலிருந்து விடுவித்து—இருப்புப் பெட்டியிலிருந்து விடுதலை செய்து—வறியவர் முகம் மலரும் வண்ணம் வாரி வழங்குகின்ற செயலும் அத்தகையதே. ஈகைக்குக் கையெடுப்போர் எவரேயாயினும் அவரெல்லாம் புகழுக்கு உரியாரே.

# 5

# அன்பில்லாத வாழ்க்கை பாலைவனம்

இக்கட்டுரையில் விழியையும் விளக்கையும்பற்றி அறிந்துகொள்வோம். கண் மாந்தருக்கு எத்துணை இன்றியமையாதது என்று ஏற்கெனவே தெரிந்து கொண்டிருக்கிறோம். மனித உடம்பில் கண்ணே தலை சிறந்த உறுப்பு.

**கண்ணற்றவர்க்கு உலகம் பாழ்வெளி**

கண்ணில்லாதவர்கள் குருடர்கள். அவர்களுக்குப் பரந்துவிரிந்து கிடக்கிற இம் மாநிலம் இருள் மண்டிக்கிடக்கும் பாழ்வெளிதான். குருடர்களின் நிலை மிகவும் இரங்கத்தக்கது. கண்ணில்லாதவர்கள், பெற்ற அன்னையையும் தந்தையையும் பார்க்க முடியாது. இயற்கை, உலகில் படைத்திருக்கும் விந்தைகள் ஆயிரம் ஆயிரம். பூக்களில்தாம்

எத்தனை வகைகள்! ரோஜாவையும் மல்லிகையையும் முல்லையையும் நாளெல்லாம் பார்த்துக்கொண்டிருக்கலாம். கண்ணில்லாதவர்கள் இப் பூக்களின் அழகைக் காணமுடியுமா? சூரியன், சந்திரன், வானத்தில் கண்சிமிட்டும் விண்மீன்கள், மழை நேரத்தில் இயற்கை வானில் தீட்டுகின்ற வானவில் கோலம்—பார்க்கப் பார்க்க உயிரும் உணர்வும் ஊட்டுகின்ற இக்காட்சிகளையெல்லாம் கண்ணற்றவர்கள் எங்கே காண்பது? விரிகடல், அதில் பேரிரைச்சலோடு பாய்ந்தெழும் அலைகள், அக் கடலிலே செல்லும் மரக்கலங்கள்—இவை எதனையும் விழியற்றவர்கள் காணஇயலாது. 'ஆள் பாதி; ஆடை பாதி' என்பார்கள். ஆடையே மனிதனை முழு மனிதனுக்குகிறது. ஆடைகளில்தாம் எத்தனை விதங்கள்! கடைத்தெருவில் சென்ருல் அங்கே அடுக்கிவைக்கப்பட்டிருக்கும் வண்ண வண்ண ஆடைகள் எவர் கண்ணையும் பறிக்கும். அந்த ஆடைகளால் கண்ணற்றவர்களுக்குப் பயன் ஏது? கண்ணற்றவர்கள் உலக இன்பத்தில் பெரும் பகுதியை இழந்துவிடுகிருர்கள். ஆசை மனைவியையோ, இன்பக் குழந்தையையோ அவர்கள் கண்ணுல் காணமுடியாது. கண்ணுக்குத் தீனியென்று அழகைச் சொல்வது உண்டு. சப்பட்டை மூக்கு, வெளியே நீட்டிக்கொண்டிருக்கும் பல், கூன் விழுந்த முதுகு, பாதி வழுக்கை விழுந்த தலை, தள்ளிக்கொண்டிருக்கும் வயிறு—இப்படி ஒரே கோர உருவமாக இருப்பவர்களுக்கும் தங்கச்சிலை போன்ற அழகர்களுக்கும், உள்ள வேறுபாடு கண்ணற்றவர்களுக்குப் புலப்படாது.

### இழப்பு பெரிது, மிகப் பெரிது

கண்ணற்றவர்கள் கொடுத்துவைக்காதவர்கள். உடம்பில் பிற உறுப்புக்கள் அனைத்தும் இருந்தும் கண் இரண்டு மட்டும் இல்லாக் காரணத்தால் அவர்கள் அடைகின்ற இழப்பு பெரிது, மிகப் பெரிது.

### கண்ணும் ஒளியும்

கண்ணின் செயல், பார்ப்பது. கண் எப்படிப் பார்க்கிறது? உங்கள் ஆசிரியர் இதனை உங்களுக்கு விளக்கியிருப்பார். கண்ணின் அமைப்பு வியப் பூட்டுவது. கண், ஒளியின் உதவியின்றிப் பார்க்க முடியாது. பகலில் இருக்கும் கண்களே இரவிலும் உங்களுக்கு இருக்கின்றன. அறையில் விளக்கு எரியும் போது உங்களுக்குக் கண் தெரிகிறது; புத்தகத்தைப் படிக்கிறீர்கள். எதிரேயுள்ள உங்கள் அப்பா, அம்மா வையெல்லாம் பார்க்க முடிகிறது. விளக்கை அணைத்துவிடுங்கள்; இப்போது உங்களுக்குப் புத்தகம் தெரியாது. அப்பா, அம்மா, மேசை ஏதும் தெரியா. கண்ணிருந்தும், விழித்த விழியாக நீங்கள் இருந்தும் இருட்டறையில் உங்களுக்குக் கண் ஏன் தெரிய வில்லை? ஒளியின் உதவியின்றிக் கண்ணுக்குப் பார்க் கின்ற ஆற்றல் இல்லை. பகலில் சூரிய வெளிச்சம் நம் கண்களுக்கு ஒளி நல்குகிறது. அதனால் வீடு, வாசல், அண்ணன், தம்பி, நாய், பூனை அனைத்தையும் நாம் பார்க்க முடிகிறது. அதுபோல இரவில் நிலவு வெளிச்சத்தில் உலகை நாம் காண்கிறோம். நிலவின் ஒளி புகாத இடங்களில் வீடுகளின் உள்ளே விளக்கின் உதவியோடு நாம் பார்க்கிறோம். மின்சார விளக்

காயினும் மண்ணெண்ணெய் விளக்காயினும் ஏதோ ஒரு விளக்கு நமக்குத் தேவை. இல்லையேல் நாம் எதையும் பார்க்க முடியாது; படிக்க முடியாது.

கண்ணுக்குப் பார்க்கும் ஆற்றல் விளக்கின் உதவியின்றி இல்லை. இந்த உண்மையையே நன்னெறி வேறொரு முறையில் எடுத்தியம்புகிறது. விளக்கு இருக்கிறது; சூரியன் இருக்கிறான்; நிலவு இருக்கிறது. இத்தனை இருந்தும் குருடர்களுக்கு ஏது பயன்? ஒளியும் விளக்கும் கண்ணுள்ளவர்களுக்கே பயன்படும். கோடி சூரியப்பிரகாசமாக வீட்டில் விளக்கெரிந்து யாது பயன்? குருடர்களின் இருளை அது அகற்ற முடியாது. உலகுக்கு ஒரு விளக்கு என்று சொல்லத்தகும் கதிரவனும் மதியும்கூட விழியிலார்க்கு என்ன பயனை விளைவித்துவிட முடியும்? கண்ணுள்ளவர்களுக்கு வீட்டில் எரியும் சிறு முட்டைக் கிளாஸ் மண்ணெண்ணெய் விளக்குக்கூட ஒளியை நல்கும்; இருளை அகற்றும். அதன் உதவி கொண்டு எதனையும் பார்க்க முடியும். விழியில்லாதவர்களுக்கு விளக்கால் பயனில்லை என்னும் உண்மையை நன்னெறிப் பாடல் அழகாக எடுத்தியம்புகிறது.

இல்லானுக் கன்பிங்கு இடம்பொருள் ஏவல்மற்
றெல்லாம் இருந்தும் அவற்கு என்செய்யும்?—நல்லாய்!
மொழியிலார்க்கு ஏது முதுநூல் தெரியும்?
விழியிலார்க்கு ஏது விளக்கு? (15)

பேச முடியாதார்க்கு நூற்பயன் இல்லை

விழியற்றவர்களுக்கு விளக்கால் பயனில்லை. தெரிந்துகொண்டோம். நன்னெறி காட்டும் மற்றோர்

உண்மை 'மொழியிலார்க்கு ஏது முதுநூல்?' என்பதாகும். பேசமுடியாத ஊமைக்கு நூலால் யாது பயன்? ஊமை கல்வி கற்க வழியுண்டு. ஆனால் அவன் படித்ததை வெளியில் எடுத்து இயம்ப முடியாது.

**'இணர்ஊழ்த்தும் நாறு மலரனையர் கற்றது**
**உணர விரித்துரையா தார்'** (குறள். 950)

என்னும் குறள், மலர்ந்தும் மணம் வீசாத பூவை ஒத்த படிப்பாளிகளைக் குறிக்கிறது. பேசும் வாயிருந்தும், கற்றதை, 'நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்று மற்றவர்க்குச் சொல்லமாட்டாதவர்களின் இரங்கத்தக்க நிலையை அது படம் பிடித்துக் காட்டுகிறது. ஊமைகளின் நிலையும் அது தானே. ஊமை படித்ததைப் பிறருக்குச் சொல்ல முடியாது.

**அன்பில்லாதவன் வாழ்க்கை**

விழியற்றவர்களுக்கு விளக்கால் பயனில்லை; மொழியற்ற ஊமைகளுக்கு நூலால் பயனில்லை. அது போல அன்பற்றவர்களுக்கு வாழ்க்கை வளத்தால் பயனில்லை.

அன்பில்லாதவன் வாழ்க்கை பாலைவனம். எத்துணை வளமுடையதாயினும் அவன் வாழ்க்கை பயனற்றதே.

**'அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு**
**என்புதோல் போர்த்த உடம்பு'** (குறள். 80)

என்னும் குறள் இதனையே வலியுறுத்துவதாகும். உயிரின் இயல்பு அன்பு செய்வது; ஆகவே அன்புக்கு இடமில்லாதவர்கள் மரக்கட்டைகள்; அவர்களை உயி

ருள்ளவர்களாகக் கருதமுடியாது. மனித உருவத்தில் அவர்கள் உலவினுலும் 'தோல் போர்த்திய எலும்புக் கூடுகள்' என்றே அவர்களைச் சொல்லவேண்டும்.

உயிருக்கும் உடம்புக்கும் உள்ள தொடர்பே அன்புதான்! வையகத்தில் இன்பம் காண்கிறவர்கள் அன்பினுலேயே காண்கிருர்கள். பட்டுப்போன மரம் பாறையில் தளிர்ப்பதுண்டா? ஒருபோதும் இல்லை. உள்ளத்தில் அன்பில்லாத உயிர்கள் சிறப்புற வாழ்தலும் ஒருபோதும் இல்லை. உள்ளுறுப்பு—அதுதான் உள்ளம். அந்த உள்ளத்தில் அன்பில்லாவிட்டால் புறத்தே உள்ள கை, வாய், மூக்கு, கண்களெல்லாம் என்ன நன்மையைச் செய்து விடமுடியும்? உள்ளத்தில் அன்பிருந்தால்தான், கையும் வாயும் பிறருக்கு உதவும். அன்பின் சிறப்பைப்பற்றித் தமிழ்மறை எத்துணை அழகாகக் கூறி வைத்திருக்கிறது!

இடம், பொருள், ஏவல் ஆகிய அனைத்தும் இருப்பினும், அன்பில்லாதவர்கள் வாழ்க்கை சிறக்காது. இடம் என்பது நிலை, வாய்ப்பு, காலம் ஆகியவற்றைக் குறிக்கும். பெரிய பதவியில் இருப்பார்கள். நினைத்தால் மனித சமுதாயத்திற்கு அவர்கள் எவ்வளவோ நன்மையைச் செய்துவிட முடியும். அன்பில்லாவிட்டால் அந்த எண்ணம் அவர்களுக்கு எப்படிப் பிறக்கும்? பொருள் என்பது வாழ்க்கை வளம். எத்துணைப் பொருட்செல்வம் இருப்பினும் அகத்தில் அன்பில்லையேல், அந்தச் செல்வம் சிறக்காது. ஏவல் என்பது ஒருவர்க்குள்ள ஆள், பேர், மாகாணம் முதலிய வசதிகள், 'வெட்டிவா' என்ருல்

கட்டிவரவும், காலால் இடும் கட்டளையைத் தலையால் நிறைவேற்றவும் பணியாளர் பலர் காத்திருப்பினும் அன்பு இல்லாதவர்களுக்கு அவர்களால் பயனில்லை.

**அன்பு வாழ்க்கையின் உயிர்நாடி**

அன்பு இல்லாதவர்கள் அறம் செய்யமாட்டார்கள்; புகழைத் தேடமாட்டார்கள். அன்பு, வாழ்க்கைக்கு உயிர்நாடி; அடிப்படையான பண்பு. அன்பில்லாத உலகத்தைக் கற்பனை செய்து பார்ப்பதும் அரிது. அன்பில்லையேல் தாய்க்குப் பிள்ளையிடம் பற்று இருக்குமா? கணவனுக்கு மனைவியிடம் பாசம் இருக்குமா? இந்தப் பற்றும் பாசமும் இல்லையேல் உலகம் வாழையடி வாழையாகத் தழைப்பது ஏது?

தாய்க்கும் குழந்தைக்கும் உள்ள அன்புப் பிணைப்பை எண்ணிப் பாருங்கள். தன் குழந்தையென்னும் அந்த அன்பு இல்லையேல், உலகம் வரண்ட பாலையாகிவிடும். கண்ணும் கருத்துமாகக் குழந்தைகளைப் பாலூட்டிச் சீராட்டி வளர்க்கும் தாய்மார்கள் இல்லையேல், உலகில் மனிதப்பூண்டே அற்றுவிடும். குழந்தைகளிடம் அன்பில்லாத தாய்மையை நாம் மனத்தால்கூடக் கற்பனைசெய்ய முடியாது. அது அவ்வளவு கொடுமையான நிலை! நினைத்தாலும் நெஞ்சு சுடும்.

**இன்ப நிலைக்கு வித்து அன்பு**

அன்பு என்னும் சங்கிலியே உலக மக்களைப் பிணைத்து வருகிறது. அன்பு என்னும் மழையே உலக

மாகிய பயிரை வாழ்வித்து வருகிறது. ‘உலகுக்கு உயிரூட்டும் கதிரவன்’ என்றும் அன்பைச் சொல்லலாம்.

அன்பர் பணி செய்ய எனை
ஆளாக்கி விட்டுவிட்டால்,
இன்ப நிலை தானே வந்
தெய்தும் பராபரமே!

என்பர் தாயுமானுர். இன்ப நிலைக்கு வித்து அன்பு செய்தலே ஆகும்.

கண்ணுள்ளவர்களுக்கே ஒளி பயன்படும்; மொழியுள்ளவர்களுக்கே கல்விச் செல்வம் பயன்படும்; அவைபோல அன்பு உள்ளவர்களுக்கே பொருட் செல்வம் பயன்படும்.

விழி இல்லாதவருக்கு விளக்கால் பயனில்லை; ஊமைகளுக்கு முதுநூலால் பயனில்லை; அன்பில்லாதவர்களுக்கு வாழ்க்கை வளத்தால் பயனில்லை.

உயிரின் இயல்பே அன்பு செய்தல்; அன்பில்லாத வாழ்க்கை பாலைவனம்; பாறைநிலம். அதனுல் யாருக்கும் பயனில்லை. எவரும் அவர்களை விரும்பார்.

விழியற்றவர்கள் குருடர்கள்; பேசும் மொழியற்றவர்கள் ஊமைகள்; அன்பற்றவர்கள் உயிரற்ற பிணங்கள். நன்னெறி வலியுறுத்தும் உண்மை இதுதான்.

6

# சினத்தைக் காத்தலே குணம்

சினத்தினுல் வரும் கேடுகளை அறிந்து கொள் வோம். ஏற்கெனவே ஆத்திசூடியில் 'ஆறுவது சினம்' என்று படித்திருக்கிறோம். 'கோபம் மனிதனை மிருக மாக்கிவிடும். சிலருக்குக் கோபம் வந்தால் கண்மண் தெரியாது. கோபம் எத்தனையோ கேடுகளை விளைத் திருக்கிறது; விளைத்து வருகிறது.

**நன்மை பயக்கும் கோபம்**

சிறுபிள்ளைகளாகிய உங்களுக்கும் கோபத்தின் இயல்பை அறியும் வாய்ப்பு சில நேர்ந்திருக்கும். கோபத்தில் எத்தனையோ வகை உண்டு. நண்பர்கள் ஏதோ சிறு மனத்தாங்கல் காரணமாக ஒருவர்மீது ஒருவர் கோபப்படுவார்கள். அந்த ஆத்திரம் சில நாளில், சமயங்களில் சில மணியில் மறைந்துவிடும். உங்கள் ஆசிரியர் நீங்கள் ஒழுங்காக வகுப்புக்குப் பாடம் படித்துக் கொண்டு வராவிட்டால் கோபப்

படுவார்; சில சமயங்களில் உங்களுக்குத் தண்டனையும் தருவார். இந்தக் கோபம் நன்மை பயக்கும் கோபம். அப்படி அவர் கோபப்படாவிட்டால் மறுநாள் நீங்கள் படித்துக்கொண்டு வரமாட்டீர்கள். அதுபோலவே வீட்டில் உங்கள் அப்பா அம்மா உங்கள்மீது கோபப்படுவதும் பெரும்பாலும் உங்கள் நன்மைக்காகவே இருக்கும். சில பிள்ளைகள் வீட்டில் ஒழுங்காகப் படிக்கமாட்டார்கள். சில பிள்ளைகள் வாரத்திற்கு நான்கு தடவை படம் பார்க்கச் செல்லவேண்டுமென்று முரண்டு பிடிப்பார்கள். சில பிள்ளைகள் வீட்டு வேலைகளை அப்பாவுக்கும் அம்மாவுக்கும் உதவியாகப் பார்க்கமாட்டார்கள். இந்த மாதிரிச் சமயங்களில் பிள்ளைகளைப் பெற்றவர்களுக்குக் கட்டாயம் கோபம் வரத்தான் செய்யும். இந்தக் கோபம் அந்த நேரத்தில் பிள்ளைகளுக்குக் கசப்பு மாத்திரைபோல இருந்தாலும் பிற்பாடு அவர்களுக்கு நன்மை செய்யக்கூடியதே.

**தீமைகளே மிகுதி**

ஆனால், கோபத்தினால் நன்மைகளைவிடத் தீமைகளே அதிகம். 'கோபி குதிரைமேல் கடிவாளம் இல்லான்' என்று ஒரு பழமொழி உண்டு. கடிவாளம் இல்லாமல் குதிரை சவாரி செய்கிறவன் கதியையும், அவனால் பிறருக்கு விளையக்கூடிய ஆபத்துக்களையும் கற்பனை செய்து பாருங்கள். மனிதன் கோபப்படும்போது, தன் நிதானத்தை இழந்து விடுகிறான். அப்போது, தான் என்ன செய்கிறோமென்பது அவனுக்குத் தெரிவதில்லை. கோபம் பொல்லாத நெருப்பு;

பற்றிக்கொண்டால் பெரிய ஆபத்து. அதனைத் தண்ணீர் விட்டு அணைக்க வேண்டுமேயொழியக் காற்று வீசி வளர்க்கக் கூடாது.

**ஆறுவது சினம்**

கோபத்தைக் காத்தல்தான் சிறப்பு. அதுதான் குணமென்கிறது நன்னெறி.

**உள்ளம் கவர்ந்தெழுந்து ஓங்கு சினங்காத்துக்**
**கொள்ளும் குணமே குணமென்க—வெள்ளம்**
**தடுத்தல் அரிதோ? தடங்கரைதான் பேர்த்து**
**விடுத்தல் அரிதோ? விளம்பு!** (8)

கோபத்தைக் காட்டுவது எளிதா, அடக்குவது எளிதா என்றால் காட்டுவதுதான் எளிது என்போம். எவர் மீதும், எதற்காகவும் திடீரெனக் கோபப்பட்டு விடமுடியும். ஆனால் வருகின்ற, அடக்கமுடியாத சினத்தைத் தடுத்து நிறுத்துவதுதான் அரிய செயல். 'செயற்கரிய செய்வார் பெரியர்' என்பர் வள்ளுவர். சினத்தை அடக்குதல் அருஞ்செயலன்றோ! அதனால் தான் அது மேன்மையான குணமாகக் கருதப்படு கிறது.

**வெள்ளத்தைக் கரையிட்டுத் தடுத்தல்**

சினங்கொள்ளுதல் எளிது; சினத்தை அடக் குதல் அரிது, அரியதைச் செய்தலே பெருமையென்று உரைக்கிறார் சிவப்பிரகாசர். அதற்கு அவர் காட்டும் உவமேயமும் மிகப் பொருத்தம். வெள்ளத்தைக் கரையிட்டுத் தடுப்பது அரிய செயல்; முயற்சியும் உழைப்பும் பொறுமையும் அதற்குத் தேவை.

'வெள்ளம் வருமுன்பு காத்தல்' உயரிய பண்பாகும். வெள்ளம் ஊரை அழித்துவிடும்; உடைமைகளை அழித்துவிடும்; சற்று ஏமாந்தால் மக்களையும் கொள்ளைகொண்டு போய்விடும். வெள்ளத்தால் வீடிழப்போர் தொகை மிகுதி. பள்ளங்களில் வசிக்கின்றவர்கள் எப்போதும் வெள்ள அபாயத்தை எதிர்நோக்கியே வாழவேண்டும். வெள்ளத் தடுப்பு அரசினரின் முக்கிய பணிகளில் ஒன்று. ஆற்றுக்குக் கரையும் அணையும் இல்லையேல், ஆற்றோரத்தில் வாழும் மக்கள் எப்போதும் மடியில் ஆபத்தைக் கட்டிக்கொண்டே வாழவேண்டியிருக்கும். ஆற்றுக்கு அணை கட்டினால் வெள்ள நீரைத் தேக்கி நல்லமுறையில் பயன்படுத்த முடிகிறது; வெள்ளம் ஊரைக் கொள்ளை கொள்ளாமலும் அணை காக்கும்.

ஆனால், அணை கட்டுவது எளிதான செயலன்று; அரசினர் கட்டும் அணைகளைப் பற்றி அடிக்கடி தெரிவிக்கப்படுகிறது. அணைகளுக்கு ஆகும் செலவு, காலம், உழைப்பு அனைத்துமே மிகுதி. இந்தியாவில் பக்ரா நங்கல் அணையைப் பல கோடி செலவில் கட்டியிருக்கிறார்கள். இந்தியாவுக்குச் செல்கிறவர்களுக்கெல்லாம் இந்திய அரசாங்கம் அந்த அணையைப் பெருமையோடு காட்டுகிறது. அணை போடுவது என்பது எளிதான காரியமன்று. சினத்தை அடக்குவதும் வெள்ளத்தைக் கரை கட்டித் தடுப்பது போன்ற அரிய செயலே. உள்ளத்தில் கொதித்தெழும் சினத்தைத் தடுப்பதும் அருஞ்செயல்; வெள்ளத்தைத் தடுப்பதும் அருஞ்செயல். ஆனால்,

இந்த இரண்டு அரிய செயல்களும் நன்மை தருபவை.

வெள்ளத்தைத் தடுத்தல் அரிது: அதுபோலவே சினத்தையும் தடுத்தல் அரிது. அப்படியானால் எது எளிது? கட்டியிருக்கிற அணையை உடைத்து வெள்ளத்தைப் பாயவிடுவது எளிது. எவரும் கரையை உடைத்துவிட முடியும், சிறுபிள்ளை நினைத்தால்கூட அணையைத் திறந்துவிட முடியும். அணையை உடைப்பதும் கரையைப் பெயர்ப்பதும் எவரும் செய்யக் கூடிய எளிய செயல்கள். அதற்கு நீண்ட ஆலோசனையோ, பெருந் திட்டமோ தேவையில்லை. உழைப்பு, பணச்செலவு முயற்சிக்கு அங்கே இடமில்லை. நொடிப்போதில் இக் காரியத்தை நடத்திவிடலாம்.

### அழிவு வேலையும் ஆக்க வேலையும்

பல ஆண்டு, பல கோடி செலவில், பல்லாயிரம் பேர் கட்டிய அணைகளைக் கூடச் சில நாட்களில் விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலர் உடைத்துவிட முடியும். இந்த நாளில் அணைகளை உடைக்க மனித உழைப்புக்கூடத் தேவையில்லை. வெடிகுண்டு வைத்தால் போதும். ஜப்பான் காலத்தில் போர் நடத்துகையில் பாலங்களும் சாலைகளும் எவ்வளவு வேகமாக உடைக்கப்பட்டன என்பதைப் பார்த்தவர்களுக்கு இந்த உண்மை நன்கு விளங்கும். எதனையும் உடைப்பது எளிது. உருவாக்குவதுதான் அரிது. அழிவு வேலை எளிதில் நடக்கும்; ஆக்கவேலை அவ்வளவு எளிதில் நடவாது.

**சினத்தால் விளையும் கேடு**

சினத்தை அடக்காமல் வெள்ளம்போல் பாய விடுவது எவருக்கும் எளிது; ஆனால் கரை பெயர்ந்து பாயும் வெள்ளம்போல, கோபத்தாலும் ஆபத்து அதிகம். சினம் அது வருகின்ற ஆளைப் பொறுத்துக் கேடு பயக்கும். ஹிட்லருக்குக் கோபம் வந்தது. அது இரண்டாவது உலகப் போராக மூண்டு உலக மக்களை அவதியில் ஆழ்த்தியது. மாண்டவர்கள் தொகை ஏராளம்: கைகால் இழந்து முடமானவர்கள் எண் ணற்றோர்; உலகில் நேர்ந்த பொருட்சேதத்திற்கு அளவில்லை; பஞ்சமும் பட்டினியும் மக்களை வாட்டி யெடுத்தன. மீண்டும் உலகப் போர் மூளக்கூடாது என்று உலகிலுள்ள ஒவ்வொருவரும் உறுதி எடுத்துக் கொள்ளும் அளவுக்கு அந்தப் போர் அவ்வளவு கொடுமையை விளைவித்தது. இத்தனைக்கும் கார ணம் ஹிட்லர் என்னும் ஒரு மனிதனின் சினம்! அதனை அவன் தடுத்திருந்தால், உலகில் போரே மூண்டிருக்காது!

வீட்டில் அப்பாவுக்குக் கோபம் வந்தால் அன்று வீடே அலைமோதும், அதன் எதிரொலியை, அம்மா வின் சமையலிலும் பள்ளிக்குச் செல்லும் உங்களிட மும் காணமுடியும். எல்லை மீறுகின்ற சினத்தால் கேடு விளைவது திண்ணம். படுக்கையில் தன் குழந்தை சிறுநீரைக் கழித்து விட்டதென்பதற்காக ஒரு தாய் தன்குழந்தையை அடித்துக் கொன்றாள் என்றுசெய்தி வந்தது. மனிதன் மிருகமாகிவிடும் நிலை இது.குழந்தை களை நல்ல வழியில் திருத்தக் கண்டிக்க வேண்டியது

தான். அதற்குத் தேவையானல் ஒன்றிரண்டு பிரம்படி கூடத் தரலாம். ஆனல் பெற்ற குழந்தையைப் பிணக் குழியில் தள்ளும் அளவுக்குக் கோபத்திற்கு இடம் தரக்கூடாது. செத்தபிள்ளை மீண்டும் வருமா? 'கோபம் சண்டாளம்', 'கோபம் பாவம் நித்திரை சத்துரு' என்னும் பழமொழிகள் சினத்தின் சிறுமையை விளக்குபவை.

சினத்தை அடக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். அதற்குத் திருக்குறள் நல்ல வழியைக் காட்டுகிறது.

'வலியார்முன் தன்னை நினைக்க தான்தன்னின்
மெலியார்மேல் செல்லு மிடத்து.' (குறள். 250)

நம்மைவிட முரடர்கள் நம்மீது கோபம் கொண்டால் நம் கதி என்ன ஆகும்? நாம் சுக்கு நூருகிவிடுவோம். எளியவர்கள்மீது கோபப்படும்போது, இதனை நாம் நினைத்துக் கொண்டால், கோபம் தாஞக ஆறிவிடும். கோபத்தின் விளைவுகளை உணர்ந்தவர்கள் சினத்திற்கு இடம் தரமாட்டார்கள். கோபம் கட்டு மீறி வரும்போது, அது விளைத்த கேடுகளை மனக்கண் முன் கொண்டுவந்தால் கோபம் தாஞக மாறிவிடும்.

**கோபம் அற்ருல் குரோதம் அறும்**

பெரியவர்களுக்கு எளிதில் கோபம் வராது; வந்தாலும் உடனே மாறிவிடும். பொறுமை உள்ளவர்கள், நன்மை தீமைகளை உணர்கின்ற ஆற்றல் படைத்தவர்கள் விரைவில் கோபத்தின் வசப்பட மாட்டார்கள். 'கோபம் அற்ருல் குரோதம் அறும்'. கோபம் இல்லாதவர்களுக்குப் பகையும் இல்லை. பகை இல்லாதபோது வாழ்க்கை அமைதியாக இருக்கும்.

நன்னெறி சுட்டிக்காட்டும் நீதி என்ன? கோபத்தை அடக்கவேண்டும், கோபத்தை அடக்கும் குணமே குணம். குணமென்று சொல்லத்தக்கது சின மின்மையே.

### கோபியும் குணசாலியும்

கோபம் உடலுக்கு கெடுதி பயக்கிறதென்று உடற்கூறு வல்லுநர்கள் கூறுவர். இக் குணத்தினுல் ஏற்படும் கொதிப்பும் படபடப்பும் நரம்புகளேப் பாதிக்கின்றன. உடல் நலத்தைப் பேணவிரும்பு வோர், கோபப்படாதிருத்தல் இன்றியமையாதது.

கோபிக்கு எதிர்ப்பதம் குணசாலி என்பதாகும். கோபம் இல்லேயேல் குணம் இருக்கும் என்பது இத ஞல் தெளிவாகும். சுடுமூஞ்சித்தனம், கடுகடுப்பு, எரிச்சல் இவை கோபிகளின் இயல்புகள். அவர்களே யார் விரும்புவார்? சிரித்தமுகம், இனியசொற்கள், பணிவு இவை குணசாலிகளின் சிறப்புகள். எவரும் இவர்களே விரும்புவது இயல்புதானே!

### சினத்தை அடக்குவோம்

வெள்ளத்தைக் கரைபெயர்த்துவிடல் எளிது; அதுபோலச் சினத்தைக் கட்டு மீறவிடுவதும் எளிது. ஆனுல் இரண்டினுலும் நேரும் தீங்கு மிகுதி.

வெள்ளத்தை அணேயிட்டுத் தடுப்பது அரிது; அதுபோலச் சினத்தைக் கட்டுப்படுத்துவதும் அரிது. ஆனுல் இந்த இரண்டு அரிய செயல்களும் நன்மை பயப்பவை.

ஆகவே சினத்தை அடக்குவோம். சிறப்புப் பெறுவோம். குணமென்னும் குன்றேறி நிற்போம்.

# 7

# இன்சொல்லே உலகை மகிழ்விக்கிறது

கற்கண்டு இனிக்கும்; வேப்பெண்ணெய் கசக்கும். கற்கண்டை யாரும் விரும்புவர்; வேப்பெண்ணெயை எவரும் வெறுப்பர். இனிமைக்கு உலகில் வரவேற்புண்டு; கசப்புக்கும் கடுமைக்கும் வரவேற்பிராது. இது எல்லோரும் அறிந்த உண்மை.

### குழந்தைகளைக் கவர்வது இனிப்பு

குழந்தைகளாகிய உங்களுக்குக் கற்கண்டு என்ருல் கொள்ளை ஆசை. அது இருக்குமிடத்தை எறும்புகூடக் கண்டுபிடிப்பது அரிது. ஆனுல் நீங்கள் கண்டு விடுவீர்கள். உங்கள் தாயார் உங்கள் கண்ணில் படக்கூடாதென்பதற்காகக் கற்கண்டுச் சீசாவை எத்தனையோ இடங்களில் மாற்றி மாற்றி வைப்பார்கள்; ஒளித்து வைப்பார்கள். எப்படி மறைத்தாலும்

உங்கள் ஊசிக் கண்கள் கற்கண்டு இருக்குமிடத்தைக் கண்டுவிடும். சுற்கண்டைக் கொடுத்து எந்தப் பிள்ளையையும் வசப்படுத்திவிடலாம். மிட்டாய், பெப்பர்மின்ட், சாக்லேட் ஆகியவற்றை நாளும் பத்துக் காசுக்காவது வாங்கித் தின்னுவிட்டால் உங்களுக்கு மனம் அமைதி அடையாது.

எனக்குத் தெரிந்த பெரியவர் ஒருவர். அவரைச் சுற்றி எப்போதும் பிள்ளைகள் மொய்த்துக்கொண்டிருப்பார்கள். எந்தப் பிள்ளையையும் அவர் எளிதில் தன்னிடம் பேசவைத்துவிடுவார். அப்படி என்ன வசியமந்திரம் அவரிடம் இருந்தது? எப்போதும் அவர் தன் பையில் மிட்டாய் வைத்திருப்பார். அவரிடம் போனுல் மிட்டாய் கிடைக்கும் என்ற இரகசியம் பிள்ளைகளுக்குத் தெரியும்; மிட்டாயைக் கொடுத்தால் பிள்ளைகள் தன்னிடம் ஓடிவரும் என்ற இரகசியத்தை அவர் அறிவார். அவர் செல்வாக்குக்குக் காரணம் இப்போது புரிகிறதல்லவா?

**இனிப்பின் கவரும் ஆற்றல்**

மிட்டாய், கற்கண்டு, வெல்லக்கட்டி, சீனி இவற்றுக்குள்ள கவர்ச்சி, அவற்றின் இனிப்பு—இனிமை! கசப்புப் பண்டங்களை எல்லோருமே வெறுப்பர். மருந்து கசக்கும். எந்தப் பிள்ளையாவது மருந்தை விரும்பிக் குடிக்கிறதா? கையில் பிரம்புடன் தகப்பனுர் எதிரே நிற்க, தாயார் மடியில் வைத்து மடக்கிக்கொண்டு கொடுத்தால்தான் குழந்தைகளுக்கு மருந்து உள்ளே போகும். வேப்பெண்ணெய் படு கசப்பு. அது நல்ல மருந்து உடம்புக்கு மிக நல்லது.

ஆனால் அந்தக் கசப்பு எண்ணெயைக் குடிக்க எவருக்குத்தான் மனம் வரும்? இரண்டு வெல்லக் கட்டியையாவது எதிரில் வைத்துக்கொண்டுதான் வேப்பெண்ணெய் ஒரு கரண்டி குடிக்கவேண்டும். பாகற்காய் ஒரே கசப்பு. அதனைக் கறிசெய்தால் வீட்டில் யாரும் தின்னமாட்டார்கள். கட்டாயத்தின் பேரில்தான் அதனைக் காலி செய்ய வேண்டும்.

கசப்பு, வெறுப்பைத் தரும். அதனை யாரும் விரும்பார். இனிப்பு, இன்பம் தரும்; அதனைத் தேடி வருவர் அனைவரும். சீனிக்கு எறும்பைப் பிடித்து விடவேண்டியதில்லை; பலாப்பழத்திற்கு, ஈயைப் பிடித்துவிட வேண்டியதில்லை. இனிப்புக்கு இயல்பாகவே கவரும் ஆற்றல் உண்டு.

**இன்சொல்லும் வன்சொல்லும்**

இனிய சொல்லுக்கு உள்ள சிறப்பும் இதுதான். உலகத்தை மகிழ்விப்பது இனிய சொல். நல்ல வார்த்தை நான்கு சொன்னால் யார் மனமும் குளிர்ந்துவிடும். இனிமைக்குப் பிறரைக் கவருகின்ற ஆற்றல் தனிச் சிறப்பு, குயிலோசைக்கு மகிழும் உலகம் கழுதையின் கத்தலுக்கு வசப்படுவதில்லை. குழந்தைகளின் மழலையிலுள்ள இனிமை கல்நெஞ்சத்தையும் கரையவைக்கும்.

இன்சொல் வரவேற்கும்; வன்சொல் வெருட்டும். 'கடுகடு' என்று பேசுகிறவர்களிடம் ஒரு பிள்ளையும் நெருங்காது, அவர்களை உலகமே வெறுக்கும். எரிந்து விழுகிறவர்களை எவர்தான் விரும்புவர்?

'இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.' (குறள். 100)

என்னும் குறள் ஒன்றே இன்சொல்லின் சிறப்பை விளக்கப் போதுமானது. பழம் இருக்கும்போது யாராவது காயைப் பறிப்பார்களா? பழம் இருக்கும் போது யாராவது காயைத் தின்பார்களா? பழத்திற்கும் காய்க்கும் உள்ள வேறுபாடுதான் இன்சொல்லுக்கும் வன்சொல்லுக்கும் உள்ள வேறுபாடு. இன்சொல் எவரையும் கவரும்; இன்சொல் எவரையும் மகிழ்விக்கும். இந்த உண்மையை நன்னெறிப் பாடல் அழகாகக் கூறுகிறது:

இன்சொலால் அன்றி இருநீர் வியனுலகம்
வன்சொலால் என்றும் மகிழாதே—பொன்செய்
அதிர்வளையாய்! பொங்காது அழல்கதிரால் தண்ணென்
கதிர்வரவால் பொங்கும் கடல். (18)

இன்சொல் வெல்லும், வன்சொல் தோற்கும் என்னும் உண்மையை முன்பே நாம் நல்வழி மூலம் தெரிந்து கொண்டிருக்கிறோம். இரும்பாற் செய்த கடப்பாரைக்கும் மசியாத கருங்கற்பாறை பசுமரத்தின் சல்லிவேருக்கு இடம் தந்துவிடுகிறது. இன்சொல்லின் வெல்லும் ஆற்றலும் இத்தகையது தான்!

**கடலின் மகிழ்ச்சிப் பெருக்கு**

உலகம் இன்சொல்லைக் கேட்டு மகிழும் என்னும் உண்மையை நன்னெறி ஒரு சான்று மூலம் விளக்குகிறது. கடலை நீங்கள் எல்லோருமே பார்த்திருப்பீர்கள். சிங்கப்பூரைச் சுற்றிலும் கடல்; மலாயாவுக்கு

மூன்று பக்கம் கடல்; ஒரு பக்கத்தில் மட்டுமே நிலம். ஆகவே சிங்கப்பூர்த் தீவிலும் மலாயாத் தீபகற்பத்திலும் வாழும் நாம், கடலை எப்படிப் பார்க்காமல் இருக்க முடியும்! கடலை இரவிலும் பார்த்திருப்பீர்கள்; பகலிலும் பார்த்திருப்பீர்கள். இரவு நேரக் கடலுக்கும் பகல் நேரக் கடலுக்கும் ஏதாவது வேறுபாடு உண்டா? இரவிலும் முழு நிலவு எறிக்கும் நாளில் கடலைச் சென்று பாருங்கள்; அமாவாசை இரவிலும் போய்ப் பாருங்கள். வேறுபாடுகளை நீங்கள் நன்கு தெரிந்துகொள்ள முடியும். பகலில் கடல் தண்ணீர்க் குளம் மாதிரி அமைதியாக இருக்கும். இரவில்தான் கடலின் பேரிரைச்சல், ஆர்ப்பாட்டம் எல்லாம். அதுவும் நிலவு காய்கின்ற இரவிலேயே கடல் பேராரவாரம் செய்யும். முழு நிலவு நாளில் கடலுக்குப் பெருங்கொண்டாட்டம். கடலில் சில சமயங்களில் பெருக்கு ஏற்படும்; சில சமயங்களில் வடிவு இருக்கும். கடல் இவ்வாறு பெருகுவதும் வடிவதும் மாறி மாறி நிகழும். கடல் பெருகும் நேரத்தில்தான் குளிக்கச் செல்வார்கள். அப்போதுதான் கரையோரத்தில் அலைமோதுதலும் நிறையத் தண்ணீரும் இருக்கும். கடலில் குளிக்கும் இன்பத்தைப் பெருக்குள்ள நேரத்தில்தான் பெற முடியும். இல்லையேல் ஏதோ தேங்கி நிற்கும் கழிவு நீரில் குளிப்பது போலவே இருக்கும்.

கடலின் கொந்தளிப்பும் பெருக்கும் இரவில் மிகுதி. அதற்குக் காரணம் நிலவு. நிலவின் ஒளி குளிர்ச்சிமிக்கது. அந்தக் குளிர்ச்சி கடலை இன்பத்-

தில் திளைக்க வைத்து ஆட்டம் போட வைக்கிறது. அதனால்தான் இரவில் கடல் கொந்தளிக்கிறது; அலைமோதுகிறது. பகலில் கடல் அமைதியாக உயிரற்று இருப்பதற்குக் காரணமென்ன? சூரியனின் வெப்பமே காரணம். கதிரவன் ஒளி, வெம்மை மிக்கது. அந்தச் சூடு பொசுக்கும்போது கடலுக்குக் களிப்பு எங்கே பிறக்கும்? தன் அலைக்கரங்களைக் கட்டிப் போட்டுவிட்டு அமைதியாக இருந்துவிடுகிறது கடல்.

நிலவின் குளிர்ச்சி கடலை மகிழ்விக்கிறது: பரிதியின் வெப்பம் கடலை வருத்துகிறது. அதனால்தான் நிலவைக் கண்டு ஆனந்தமாகப் பொங்கியெழும் கடல், பகலவனைக் கண்டால் பதுங்கிக் கொள்கிறது.

இன்சொல் நிலவின் ஒளி. வன்சொல் கதிரவன் ஒளி. நிலவின் ஒளி மகிழ்ச்சியை விளைப்பதும் கதிரவன் ஒளி துன்பத்தைத் தருவதும் இயற்கைதானே!

### நிலவு தரும் இன்பம்

நிலவின் ஒளியில் கடல் மட்டுந்தானா பொங்குகிறது? உலகில் எங்குமே இன்பத்தைப் பொங்க வைக்கும் ஆற்றல் சந்திரனுக்கு உண்டு. நிலவு, இன்பத்தின் கூறு. நிலவு வெளிச்சத்தில் மகிழாதார் எவர்? நிலவு விளக்கில் கடல் மணலில் விளையாடினால் எத்துணை மகிழ்ச்சியாக இருக்கும்! குழந்தைகளுக்கு நிலவைக் காட்டிச் சோறு ஊட்டுவார்கள், தாய்மார்கள். நிலவைப் பிடித்துத் தரச்சொல்லி முரண்டுபண்ணும் பிள்ளைகள் எத்தனைபேர்! நீங்க

ளும் சிறு பிள்ளையில் உங்கள் தாயின் இடுப்பில் ஒட்டிக்கொண்டு நிலவைப் பிடித்துத்தா என்று நிச்சயம் கேட்டிருப்பீர்கள்! இப்போது பெரிய பிள்ளையான பிறகு நிலவைப் பிடிக்க முடியாதென்று தெரிந்து கொண்டிருப்பீர்கள். என்றாலும் நிலவின் மேலுள்ள ஆசை உங்களைவிட்டு நீங்காது. நிலவு இன்பம் தருவது அதுதான் காரணம்.

**துன்பம் தரும் வெப்பம்**

ஆனால் சூரிய வெப்பத்தை எவரும் விரும்புவதில்லை.வெய்யிலினால் படும் அவதி நமக்கு நன்கு தெரியும். ஒரு நாளைக்கு நான்கு தடவை குளித்தால்கூட இந்த வெப்பக் கொடுமையிலிருந்து நாம் மீள முடியாது. கதிரவன் ஒளி நெருப்பு; அதன் கொடுமை தாங்காமல் மக்கள் மடிந்துவிடுதலும் உண்டு. வெப்பம் துன்பம் தருவது, அதனால்தான் அதனை வெறுக்கிறோம்.

நிலவின் ஒளியில் கடல் பொங்குவதும் பகலவனின் ஒளியில் கடல் மங்குவதும் நாம் நாளும் காணும் காட்சி. அதுபோல இன்சொலால் உலகம் மகிழ்கிறதென்னும் உண்மையையும் நாம் அறிவோம்.

**இன்சொல்லின் சிறப்பு**

இன்சொல் மகிழ்ச்சியை ஊட்டுவதோடு காரியத்தையும் முடிக்கிறது. இனிய சொல் பேசுகிறவர்களுக்குப் பகை இராது. இனிய சொல்லுக்குள்ள

மந்திர சக்தியை நாம் அன்றாட வாழ்க்கையிலேயே நன்கு காண முடியும். இனிக்கப் பேசத் தெரிந்த முதலாளி, தன் வேலையாட்களிடம் நிறைய வேலை வாங்கிவிடுவார். கரடுமுரடு செய்கிற பிள்ளைகளிடம் கூட இரண்டு வார்த்தை குழைவாக, இனிமையாகச் சொன்னால் அவர்களைப் பம்பரம்போல் ஆட்டிவைக்கலாம். கடுமையான சொற்கள் சாதிப்பதைவிட, இனிய சொல் சாதிப்பது மிகுதி. பகைவரைக்கூட இன்சொல்லால் வென்றுவிடலாம். ஒருவர்க்குப் பணிவு, இன்சொல் இரண்டும் இருந்தால் போதும்; வேறு அணிகலன்கள் தேவை இல்லை என்கிறது குறள். இன்சொல் நன்மை பயப்பது கண்ணுக்குக் கண்ணாகத் தெரிந்தும் வன்சொல் வழங்குவது எதனைக் கருதியோ என்று கேட்கிறார் வள்ளுவர். எவரிடத்தும் இனிமையாகப் பேச வல்லவர்களுக்கு வறுமைத் துன்பமும் வருதல் இல்லை.

**வன்சொல் தீது**

இன்சொல்லின் சிறப்பைப்பற்றி இன்னும் எவ்வளவோ சொல்லலாம். இன்சொல் எத்துணை நன்மை பயக்குமோ அத்துணை தீமை பயக்கும் வன்சொல். வன்சொல் பகைமைக்கு வித்து; நட்புக்கு எதிரி; இன்பத்திற்கு எமன். எப்போதும் கடுகடு வென்று பேசுகிறவர்கள் எதையும் சாதிக்கமாட்டார்கள்; விரோதத்தைத்தான் ஈட்டுவார்கள். வன்சொல் சில சமயங்களில் வெல்லும்; ஆனால் அந்த வெற்றி நிலையான வெற்றியாக இராது.

**வன்சொல் தவிர்த்து இன்சொல் வழங்குக**

நிலவின் ஒளியே கடலைப் பொங்கவைக்கிறது; கதிரவன் ஒளியால் கடலைக் கவர முடிவதில்லை இன்சொல்லே உலகத்தை மகிழ்விக்கிறது; வன்சொல்லுக்கு உலகம் மகிழ்வதில்லை.

இன்சொல் கற்கண்டு; வன்சொல் வேம்பு. உலகுக்கு நம் இனிய சொல் என்னும் கற்கண்டுகளையே வழங்க வேண்டும்.

# 8

# அடி தாங்கும் கேடயம் கை

கையின் பெருமையை எடுத்துரைக்கும் மற்ருெரு நன்னெறிப் பாடலைக் காண்போம். நன்றியை எதிர்பாராமல், புகழ்ச்சியை விரும்பாமல் நாவிற்கு உதவும் கரத்தின் இயல்பை முன்பு தெரிந்துகொண்டோம். இப்போது பிறர் துயரம் தாங்கும் கையின் பெருங்குணத்தைப்பற்றி அறிவோம்.

பேரறிஞர் தாக்கும் பிறர்துயரம் தாங்கியே
வீரமொடு காக்க விரைகுவார்—நேரிழாய்!
மெய்சென்று காக்கும் வியன்கோல் அடிதன்மேல்
கைசென்று தாங்கும் கடிது. (31)

கையின் உதவும் சிறப்பு நினைக்க நினைக்க வியப்புத் தருவதாகும். ஈயும் குணம் கையினுக்கே உரியதெனப் புலப்படுத்தும் வகையில் ஈகை என்னும் சொல் ‘கை’ விகுதி பெற்றிருப்பது சிந்தனைக்குரிய தாகும். கைதானே எதனையும் பிறருக்குக் கொடுக்க

முடியும். கை படைத்த பயனே பிறருக்கு வழங்குவது தான். வள்ளன்மையின் உருவம் கரம்.

**தாக்குதலும் தற்காப்பும்**

இம்மட்டோ? கையின் மற்றெரு சிறப்பு நம் உள்ளத்தை நெகிழவைக்கும். அஃது என்ன? 'அடிக்கும் கையே அணைக்கும்' என்பார்கள். அடிப் பதும் பிறகு ஆறுதலாக ஆதரவு தருவதும் கையின் இயல்பு. கை பிறரைத் தாக்கவும் ஆயுதமாக உதவும்; பிறர் தாக்கும்போது தாங்கும் கேடயமாகவும் உதவும். இராணுவ மொழியில் சொன்னல் தாக்கு தலுக்கும் தற்காப்புக்கும் உதவுவது கை. தாக்குதல் என்பது அத்துணைச் சிறப்பான செயலன்று. ஒரு நாட்டின்மீது இன்னெரு நாடு படையெடுப்பதை, தாக்குவதை இன்றைய அமைதி உலகம் விரும்புவ தில்லை; எல்லா நாடுகளுமே தாங்கள் வைத்திருக்கும் படை, ஆயுத பலமெல்லாம் தற்காப்புக்கு என்று கூறுகின்றனவே ஒழிய, மற்றெரு நாட்டைத் தாக்க நாங்கள் ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறேம் என்று கூறுவதில்லை. உண்மையான நோக்கம் எதுவாயினும் தாக்குவதற்கே இந்த ஏற்பாடு என்று சொல்ல எந்த நாடும் தயங்கக் காண்கிறேம். உலக மக்களுடைய அமைதி விருப்பத்தின் வலிமையே அவர்களை அவ்வாறு சொல்லவைக்கிறது. அமைதியைக் குலைக்கப்போகிறேம் என்று யாராவது வாய்திறந்து சொல்வார்களா? ஆகவே, தாக்க உதவுமென்றலும் தற்காப்புக்குத்தான் எல்லா நாட்டிலுமே படையும் படைக்கலமும் இருந்துவருகின்றன.

**தனக்கும் பிறர்க்கும் உதவுதல்**

தற்காப்பிலும் இரண்டு வகை உண்டு. ஒன்று தன்னுட்டைக் காத்துக்கொள்வது: மற்றொன்று பிற நாடுகளையும் காக்கச் செல்வது. மலேசியாவும் பிரிட்டனும் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கின்றன. மலேசியாவை இன்னொரு நாடு தாக்குகிற தென்றால், பிரிட்டன் உடனே உதவிக்கு வரும். பிரிட்டன் இவ்வாறு தன்னைக் காத்துக்கொள்வ தோடு பிறநாடுகளைக் காக்கும் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டிருக்கிறது. அமெரிக்கா, ரஷ்யா முதலான பெரிய நாடுகள் பிரிட்டனைப்போலவே பல நாடுகளின் தற்காப்புப் பொறுப்பை ஏற்றுள்ளன.

வல்லரசுகளின் இந்த உதவும் இயல்பைக் கையினிடமும் நாம் காணமுடிகிறது. கை தாக்கவும் செய்யும். தாங்கவும் செய்யும் அல்லவா? கை, தனக்கு வரும் ஆபத்தைத் தாங்குவதோடு, உடம்பிலுள்ள பிற உறுப்புகளுக்கு நேரும் அபாயத்தையும் முன்னின்று தாங்குகிறது, தடுக்கிறது.

**உண்மையான பலம்**

கை, சில சமயங்களில் ஆயுதமாகவும் சில சமயத்தில் கேடயமாகவும் பயன்படுகிறது. கையின் பலமே ஒருவனுக்குள்ள உண்மையான பலமாகும். 'அது பெருங்கை' என்றால் அவர்கள் பெரும் பலமும் வசதியும் படைத்தவர்கள் என்று பொருள். 'அவன் முரடன். ஏதாவது வாலாட்டினால் நம்மை ஒரு கை பார்த்துவிடுவான். பேசாமல் அவனிடம் ஒதுங்கி யிருப்பதே நல்லது' என்று சிலரிடம் நாம் அஞ்சுவது

உண்டு. அப்போது அவன் கையின் தாக்கும் வலிமைக்கே நாம் பயப்படுகிறோம். ஆகவே, பிறர் நம்மைத் தாக்காமல் இருக்கவும், கை ஒரு முன்னெச் சரிக்கையாக நிற்கிறது; நம்மைப் பிறர் தாக்கும் போது கேடயமாகப் பயன்படுகிறது; தேவைப்பட்டால் பிறரை நாம் தாக்கவும் அது ஆயுதமாகப் பயன் படக்கூடியது. கரத்தின் இம் மூன்று பயன்களேயே இரத்தினச்சுருக்கமாக நன்னெறிப் பாடல் எடுத்துரைக்கிறது.

### அடிவாங்கும் குழந்தைகள்

சில குழந்தைகளுக்கு 'அடி' என்பது லட்டு மிட்டாய் போன்றது. எத்தனே தடவை அடித்தாலும் உறைக்காத குழந்தைகள் உண்டு. கொடுக்கின்ற அடியையெல்லாம் வாங்கிக் கட்டிக்கொண்டு குறும்பு செய்கின்ற பிள்ளேகளும் உங்களிடையே இருக்கக்கூடும். அடிவாங்கச் சளேயாத பிள்ளேகள் 'அடிதின்னி மாங்கொட்டைகள்' என்று சொல்வார்கள். எத்தனே உதை வாங்கினுலும், உடனே உதிர்த்துவிட்டுத் தங்கள் போக்குப்படியே முரண்டு பண்ணக்கூடிய பிள்ளேகள் அவர்கள். பிள்ளேகளில் பலவகையினர் உண்டு. அடிக்கப்போவதாக மிரட்டிஞலே போதும். சிலர் ஒழுங்காக நடந்துகொண்டு விடுவார்கள். சிலருக்கு முதுகில் இரண்டு விழுந்த பிறகுதான் உறைக்கும்; புத்திவரும்; திருந்துவார்கள். இன்னெரு ரகம்தான் முதலில் நான் குறிப்பிட்ட 'அடிதின்னி மாங்கொட்டைகள்'. அவர்களே அடித்தால் அடிக்கிறவர்களுக்குத்தான் கைவலிக்கும்.

பலன் ஏதும் காணமுடியாது. 'அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்' என்னும் பழமொழியைப் பொய்யாக்கிவிடும் தீரர்கள் அந்தப் பிள்ளைகள்.

குழந்தைகளைப் பள்ளிகளில் ஆசிரியர்கள் அடிக்கக்கூடாதென்பது சட்டம். பிரம்பைப் பயன் படுத்தும் அதிகாரம் தலைமையாசிரியருக்கே உண்டு. இவ்வாறு வரம்பு வைத்திருப்பதற்குக் காரணம் உண்டு. ஆசிரியர்கள் சிலர் கண்மண் தெரியாமல் அடித்துப் பிள்ளைகளை ஆஸ்பத்திரிக்கு அனுப்பி விடுவது ஒன்று; மற்ருென்று இந்த அடியும் உதையும் எப்போதாவது அரிதாகக் கிடைத்தால், பிள்ளைகளிடம் அதன் பயனைக் காணமுடியும். நாள்தோறும் அடித்துக்கொண்டிருந்தால், 'இந்த ஆசிரியர்க்கு இதுதான் பிழைப்பு' என்று பிள்ளைகள் சண்டித்தனம் செய்யத் தொடங்கிவிடுவார்கள். ஆகவே, அடிப்பது என்பது அபூர்வமாக இருப்பது முக்கியம்.

**அடியும் உதையும் ஏன்?**

ஆனல், உங்களில் பெரும்பாலோர் அடிவாங்க மாட்டீர்கள், என்பது எனக்குத் தெரியும். ஏனெனில், நீங்கள் கெட்டிக்காரர்கள்; ஆசிரியர் சொற்படி கேட்கிறவர்கள். உங்களுக்கு அடியும் உதையும் ஏன்? வம்பு பண்ணும் பொல்லாத பிள்ளைகளுக் கல்லவா அது தேவை?

**கை காக்கின்ற கேடயம்**

இருப்பினும் பேச்சுக்காக வைத்துக் கொள் வோம். நீங்கள் வீட்டில் ஒரு குற்றம் செய்து விடு

கிறீர்கள். உடனே உங்கள் அப்பாவுக்குக் கோபம் வந்து உங்களைப் பிரம்பால் அடிக்கிறார். உங்கள் முதுகிலும் காலிலும் அடி மாறி மாறி விழுகிறது. 'அம்மா, அப்பா, என்று நீங்கள் கத்துகிறீர்கள். உங்கள் கண்ணில் நீர் ஆறாகப் பெருகுகிறது. ஆனாலும் உங்கள் அப்பாவுக்கு ஆத்திரம் தீரவில்லை. அடித்துக் கொண்டே இருக்கிறார். உங்கள் கை அப்போது என்ன செய்யும்? பூப்பறிக்கவா போயிருக்கும்? அடிக்க வரும்போதே உங்கள் கை 'ஓடி'ச் சென்று மறிக்கும். உங்கள் அப்பா தரும் அடி உங்கள் முதுகிலும் காலிலும் படாமல் கேடயம் போல உங்கள் கை அங்குமிங்கும் பாய்ந்து பாய்ந்து பாதுகாக்கும். ஒவ்வோர் அடி விழும் போதும் கைசென்று குறுக்கே மறிக்கும். பலன் என்ன? காலில் விழவேண்டிய அடியும் கையில் விழும்; முதுகில் விழவேண்டிய அடியும் கையில் விழும்.

உடம்பில் எந்தப் பகுதி தாக்கப்பட்டாலும் அதனைக் காக்கின்ற கேடயமாக, அந்தந்தப் பகுதிக்கு கை விரைந்தோடும். ஒருநாள் யாராவது உங்கள் நண்பர்கள் அடிவாங்கும் போது நன்கு கவனித்துப் பாருங்கள். கை எவ்வளவு விரைவாக இந்தத் தற்காப்பை மேற்கொள்கிறது என்பது அப்போதுதான் நீங்கள் உணரமுடியும்.

**கை போன்று உதவுதல்**

கன்னத்தில் அறைய வந்தால், கன்னத்தை மறைத்துக் கொள்ளும் கை! காதைத் திருகவந்தால் காதைப் பொத்திக் கொள்ளும் கை! தலையில் குட்டப்

போனுல் தலையை மறைத்துக் கொள்ளும் கை! உடம்பின் எந்தப் பகுதி தாக்கப்பட்டாலும், கை அங்கே காவலனுக நிற்கும். 'காதுதானே, கால் தானே, அவை அடிவாங்கினுல் நமக்கென்ன?' என்று கரம் சும்மா இருப்பதில்லை. உடம்பில் விழுகின்ற அடியை எல்லாம் தானே சென்று வலிய வாங்கிக் கொள்ளும் பெருந்தன்மையே கையின் சிறப்பு.

'உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு' (குறள். 788)

என்பது குறள். வேட்டி நழுவும் போது, கை தானே சென்று அதனைச் சரி செய்து உடுத்திவிடுகிறது. 'அவசர அழைப்பு' எதனையும் யாரும் கைக்கு அனுப்புவதுமில்லை: கை அதனை எதிர்பார்ப்பதும் இல்லை. அவசர உதவியை அழைப்பை எதிர்பாராமலேயே, தானே, வலியச் செய்கின்ற பண்பைக் கையிடம் காண்கிறோம்.

கை பிற உறுப்புக்களுக்கு உதவுவதோடு, அவற்றுக்கு வரும் ஆபத்துகளையும் வாங்கிக் கட்டிக் கொள்கிறது. இத்தகைய பெரும் பண்பை அறிவாளிகளிடமும் பெருமக்களிடமும் காணலாம். பிறர்க்கு வரும் துன்பத்தைத் தம் துன்பமாக நினைத்து, அதனை அவர்கள் சுமப்பார்கள். யாருக்காவது துயரம் என்றுல் அவர்கள் முன்னே நிற்பார்கள். எங்காவது தீப்பிடித்ததென்றுல், பீச்சுக்குழாயைக் கொண்டு தண்ணீர் அடித்துத் தீயை அணைக்க அவர்கள் முந்துவார்கள். வெள்ளத்தால் மக்கள் வாடினுல் அவர்களுக்கு உணவும் உடையும் உறையுளும் வழங்குவதற்கு அவர்கள் ஆவன செய்வார்கள். பிறர்

துன்பத்தைத் தம் துன்பமாகக் கருதித் துடைக்க முன்வருவது பேரறிஞர்களின் இயல்பான பண்பு. அவர்கள் பிறருக்கு நேரும் துயரத்தைத் தங்களுக்கு வந்த துயரமாக ஏற்பார்கள்; அத்துயரத்தைத் தாங்களே தாங்கிக் கொள்வார்கள்.

**அறிவினால் என்ன பயன்?**

பிறருக்கு வந்த இன்னலைத் தமக்கு வந்த இன்னலாகக் கருதி ஏற்காவிடத்து பெற்ற அறிவினால் என்ன பயன் என்று கேட்கிறார் வள்ளுவர். மற்றவர்களின் கஷ்டநஷ்டங்களை உணர்கிறவர்களையே உயிர்வாழ்கின்றவர்களென்று சொல்ல முடியும்; அப்படி உணராதவர்கள் செத்தவர்களோடு சேர்க்கப் பட வேண்டியவர்கள்.

**துயரம் துடைக்க முந்து**

நன்னெறிப் பாட்டு நமக்குச் சொல்லும் நீதி என்ன? கையைப்போல விரைந்து சென்று பிறர் துயரம் தாங்கு என்பதுதான். அவசர உதவிக்கு அழைப்பு வருமென்று எதிர்பாராதே! அடுத்த வீட்டில் அடுத்த வீதியில், நீ வசிக்கும் ஊரில் ஒரு துயரம் என்றால் ஓடிப்போய் உதவு. அத்துயரத்தை நீயும் பகிர்ந்துக்கொள்ள முந்து என்பதுதான் நன்னெறி நமக்குச் சொல்லும் அறிவுரை.

கை, பிற உறுப்புக்கள் அடிபடும் போது கேடயமாகச் சென்று அவற்றைக் காக்கிறது; அவற்றின் மீது விழும் அடியைத் தானே வாங்கிக் கொள்கிறது. பிற உறுப்புக்கள் அடிபடாமல் காக்கும் தற்காப்புக்

கோட்டையாகவும் அது விளங்குகிறது. இம்மூன்று சிறப்பியல்புகளேயும் அறிஞர்களிடமும் நாம் காண முடியும்.

கண், பிற உறுப்புகளின் துயரம் கண்டு கசிந்துருகும்: கை அத் துயரத்தைத் துடைத்துவிடும். பெரியவர்களுக்கு இந்த இரண்டு பண்புகளும் இயற்கையான சிறப்புக்களாகும்.

# 9

# பழிக்கு அஞ்சுவதே வீரம்

இப்பொழுது கண்களைப் பற்றிக் கூறும் மற்ருெரு நன்னெறிப் பாடலைக் காண்போம். கண் இரக்கத்தின் இருப்பிடமென்று தெரிந்து கொண்டோம். குருடர்களுக்கு விளக்கால் பயனில்லை எனவும் அறிந்துகொண்டோம். இப்பொழுது கண்ணின் மற்ருேர் இயல்பைத் தெரிந்து கொள்வோம்.

**ஒளி கண்டு மகிழும் கண்**

ஒளியின் துணையாலேயே கண் பார்க்கிறது. பகலில் கதிரவன் ஒளியும், இரவில் நிலவின் ஒளியும், கதிரவனும் நிலவும்புகாத இருட்டில் விளக்கொளியும் கண்ணின் பார்வைக்கு உதவிபுரிகின்றன. ஒளியின் துணையால் பார்க்கும் கண், ஒளியைக் கண்டு மகிழ்வது இயல்புதானே! பகலவன் ஒளி, கண்ணில் படவேண்டும் என்பதற்காகக் காலை நேரத்தில் பகலவன் வணக்கம் செய்யும் முறை தமிழ

ரிடையே உண்டு உலகுக்கு ஒளிதரும் பகலவனைக் கடவுளாக வணங்குவது தமிழ் மரபு. 'ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்' என்னும் சிலம்புவரி இதற்குச் சான்றாகும். கதிரவனைக் காலையில், அவன் தோன்றும் நேரத்திலும், மாலையில், அவன் மறையும் நேரத்திலும் காண்பது இன்பம் பயக்கும் காட்சி. புலவர்களையும் ஓவியக் கலைஞர்களையும் மயக்குகின்ற ஒளிக்காட்சி அது. கதிரவன் ஒளி இன்பம் பயப்பது போலவே நிலவின் ஒளியும் மக்களுக்கு மகிழ்ச்சி சேர்க்கிறது. நிலவுப் பெண்ணாள் இன்பத்தின் வடிவம். நிலவு விளக்கில் உலகம் கைகொட்டிக் களிப்புக் கடலில் குளிக்கும். கண்ணுக்குக் குளிர்ச்சி தருவது, சந்திரனின் ஒளி. அதனால் நிலவைக் கண் மிக விரும்பும். கதிரவன் ஒளிமட்டுமன்றி, விளக்குகள் நல்கும் ஒளியும் கண்ணுக்கு மகிழ்ச்சியூட்டும். ஆகவே கண்ணுள்ளவர்களுக்கு ஒளி இன்பம் பயப்பது கண்கூடு.

### இருளைக் கண்டு அஞ்சும்

ஒளியைக் கண்டு மகிழும் விழி, இருளைக் கண்டு அஞ்சும். இருட்டு என்றாலே எவருக்கும் அச்சம்தான். சிறுபிள்ளைகள் இருட்டில் வீட்டைவிட்டு நகரமாட்டார்கள். அவ்வளவு ஏன்? எங்கள் வீட்டில் ஒருதங்கை இருக்கிறாள். பொழுது சாய்ந்துவிட்டால், மாடிக்குப் போகக்கூட யாராவது அவளுக்குத் துணை செல்ல வேண்டும். இருட்டுஎன்றால் தம்பி தங்கைகளுக்கு அவ்வளவு அச்சம். பெரியவர்களுக்கும் இருட்டு என்றால் சற்று நடுக்கம்தான். விளக்குள்ள இடத்தில்

துணிவோடு போகும் நாம், இருட்டில் செல்லப் பயப் படுவோம். ஒரு வீட்டில் தன்னந்தனியாக இருப்ப வர்கள் நாலாபக்கமும் விளக்கை எரிய வைத்துக் கொள்வார்கள். விளக்கு எரிவது அவர்களுக்கு மனத் திற்குத் தெம்பாக இருக்கும். எரியும் ஒவ்வொரு விளக்கும் ஒவ்வோர் ஆள் கூட இருப்பதுபோலத் தான். 'விளக்கு இல்லாத வீட்டில் பேய் குடியிருக் கும்' என்பது பழமொழி. இருள் நிரம்பிய வீட்டில் மனிதர் வாழமுடியாது என்பதுதான் கருத்து.

**குருடர் இருளுக்கு அஞ்சார்**

சிறு குழந்தைகளை விளக்கில்லாத அறையில் படுக்க வைக்கமாட்டார்கள். விடி விளக்கு ஒன்று குழந்தைகள் தூங்கும் அறையில் இரவெல்லாம் எரிந்து கொண்டிருக்கும். குழந்தைகளை இருள் அடித்து விடுமென்ற பயமே காரணமாகும். இருட்டில் குழந்தைகள் மிரண்டு போய்விடுவர்: அதிர்ச்சிக்கு ஆளாகிவிடுவர் என்னும் அச்சம் பெற்றோர்களுக்கு உண்டு. இருளின் கொடு மையைச் சித்திரிக்கப் பேரிருள், நள்ளிருள் என் றெல்லாம் சொல்வார்கள். ஆனால் எத்தகைய இருளும் கண்ணுள்ளவர்களிடமே அச்சத்தை ஏற்படுத்தும். விழியுள்ளவர்களே இருளுக்கு அஞ்சுவர். விழியற்ற குருடர்களிடம் இருளைப் பற்றிய அச்சத்தை எதிர்பார்க்கமுடியாது. அவர் களுக்கு இரவும் ஒன்றுதான்; பகலும் ஒன்றுதான். இருளும் ஒன்றுதான்; வெளிச்சமும் ஒன்றுதான். கண்ணில்லாதவர்கள் இருளைக் கண்டு அஞ்சுவதில்லை.

இச்செயதியைச் சிவப்பிரகாசர் தம் நன்னெறியில் சுவைபட எடுத்துரைக்கிறுர்.

> அறிவுடையார் அன்றி அதுபெருர் தம்பால்
> செறிபழியை அஞ்சார் சிறிதும்—பிறைநுதால்
> வண்ணஞ்செய் வாள்விழியே அன்றி மறைகுருட்டுக்
> கண் அஞ்சுமோ இருளைக் கண்டு (34)

**அறிவுடையார் பழிக்கு அஞ்சுவர்**

'மடியில் கனம் இருந்தால்தானே வழியில் பயம்?' கண்ணுள்ளவர்களே இருளைக் கண்டு நடுங்குவர். அதுபோலவே அறிவுள்ளவர்களே பழியைக் கண்டு அஞ்சுவர். பழி என்பது கெட்ட பெயர், பொல்லாப்பு, தீயசெயல் முதலியவற்றைக் குறிக்கும்.

ஒவ்வாத காரியங்களைச் செய்ய அஞ்சுகின்ற பண்பு 'நாணுடைமை' என்று சொல்லப்படும். பழிக்கு அஞ்சுகின்ற குணம் அதுதான்.

> 'அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது
> அஞ்சல் அறிவார் தொழில்' (குறள். 428)

என்னும் குறள், அறிவுடையாருக்குள்ள தீவினையச்சத்தை நன்கு புலப்படுத்தும். தீமைகளை, பிறர்க்குக் கேடு பயக்கும் காரியங்களை, தம் நற்பெயருக்கு இழுக்குத் தேடித்தரும் செயல்களை அறிவுடையார் செய்யார்.

**பழிக்கு அஞ்சுகின்ற பண்பு**

பழிக்கு அஞ்சுவது உயரிய பண்பு. பழிபாவத்திற்கு அஞ்சி நடக்கவேண்டுமென்று பெரியோர்கள் சிறுபிள்ளைகளுக்கு அறிவுரை கூறுவார்கள். தம்பி

தங்கைகளுக்கு இதனை இன்னும் சற்று விளக்கமாகச் சொல்ல வேண்டுமென நினைக்கிறேன். பஞ்சமா பாதங்களில், அதாவது ஐந்து பெரிய குற்றங்களில் திருட்டு ஒன்று. சில பிள்ளைகளுக்குச் சிறுவயதிலேயே திருட்டுப்புத்தி வந்துவிடும். எடுத்துக்காட்டாகப் பேச்சுக்கு வைத்துக் கொள்வோம். உங்கள் வகுப்பில் நாள்தோறும் ஏதாவது ஒரு பொருள் திருட்டுப் போய்விடுகிறது. ஒருநாள் ஆசிரியருடைய பேனு காணுமற் போகிறது. மறுநாள் ஒரு மாணவனுடைய பென்சில் மாயமாய் மறைந்துவிடுகிறது. அடுத்த நாள் ஒரு தங்கையின் குடைக்கு ஆபத்து வந்துவிடு கிறது. இப்படியே வகுப்பில் களவு போய்க்கொண் டிருந்தால் ஆசிரியர் சும்மா இருப்பாரா? திருடனைக் கண்டுபிடிக்கவேண்டுமே! பையன்களைக் கூப்பிட்டு மிரட்டுவார். உண்மையைச் சொல்லிவிட்டால் தப் பித்துக் கொள்ளலாமென்று ஆசை காட்டி நடப்பை அறிய முயல்வார். பலநாள் திருடன் ஒருநாள் அகப்பட்டுத்தானே தீரவேண்டும்? ஒருநாள் கையும் மெய்யுமாகத் திருடன் பிடிபட்டுவிடுகிருன். திருட்டுப் போன பேனுவை ஆசிரியர் அவன் பெட்டிக்குள் ளிருந்தே எடுத்துவிடுகிருர். அதற்குமேல் வேறு சாட்சியம் வேண்டுமா? அந்தப் பையனுக்குச் சரி யான பிரம்படி விழும்! அதுமட்டுமா? எல்லாப் பிள்ளைகளின் முன்னிலையிலே அவனுக்குத் திருட னென்ற பட்டம்! அவனுக்கு இது எவ்வளவு அவ மானமாக இருக்கும்! மற்றவர்கள் முகத்தில் அவன் விழிக்க முடியாது.

திருடுதல் தவறான செயல். திருடக்கூடாது என்று நமக்குச் சிறுபிள்ளையிலேயே தாய் தந்தையரும் ஆசிரியரும் மற்றப் பெரியோர்களும் அறிவுரை பகர்கிறார்கள். நாம் பயிலும் பாடமும் நம்மைத் திருட்டுத் தொழிலில் ஈடுபடாமல் தடுக்கிறது. திருடினால் தண்டனை கிடைக்கும், அவமானமடைய நேரிடுமென்ற அச்சமும் நம்மைத் திருட்டில் முனையாமல் காக்கிறது. இயல்பாகவே மாந்தர்க்குச் சில அச்சங்கள் ஏற்பட்டுவிடுகின்றன. மனமறிந்து பொய் சொல்ல அஞ்சுகிறோம்; பிறர் பொருளைக் கவர அஞ்சுகிறோம்; கள் முதலிய குடிவகைகளை அருந்த அஞ்சுகிறோம். தீயகாரியங்களில், நமக்கும் பிறர்க்கும் கேடு பயக்கும் காரியங்களில், நமக்கு அவமானத்தையும் கெட்டபெயரையும் தேடித்தரும் காரியங்களில் ஈடுபட அஞ்சும் இயல்பே பழியஞ்சுதலாகும். இது நம் குணநலன்களில் ஒரு கூறாக, பண்பு நலன்களோடு ஒன்றித்து நிற்கிறது. நம் சிறப்பான ஓர் அம்சமாக இத் தீவினையச்சம் விளங்குகிறது. தீய செயல்களில் நம்மை இறங்கவிடாமல் தடுக்கின்ற காவலன் இப் பண்புதான்.

**அறிவும் மனமும்**

திருடாதே, பொய், சொல்லாதே என்று நம்மைத் தடுப்பது எது? நம் அறிவுதான் நம்மைத் தடுக்கிறது.

மனம் எங்கெங்கோ அலையும். அதனைக் கட்டிக் காப்பது எளிதன்று; சென்றவிடத்தால் செலவிடாது தீமையை விலக்கி நன்மைகளின்பால் மனத்தைச்

செலுத்துவது அறிவு. மனம், சூதாடினுல் மகிழ்ச்சி யாக இருக்குமென்று கருதும். உடனே அறிவு சூதின் தீமைகளே நினைவுபடுத்தி, மனத்தை வேறு நல்ல செயல்களில் ஈடுபடுத்தும். ஆகவே அறிவுடைய வர்கள் தீயவை செய்யார். பழிக்கு அஞ்சுகின்ற பண்பை அறிவுடையவர்களிடம் காணமுடியும்.

**வள்ளுவர் காட்டும் வழி**

திருக்குறள் பழிக்கஞ்சும் பண்பை மிகவும் உயர்வாகப் போற்றுகிறது.

> 'ஊனுடை எச்சம் உயிர்க்கெல்லாம் வேறல்ல,
> நாணுடைமை மாந்தர் சிறப்பு' (குறள். 1012)

என்னும் குறள் தீவினையச்சத்தின் தனிப் பெரும் சிறப்பை விளக்குவதாகும். உண்பது உடுப் பது, பிள்ளை பெறுவது—இவையெல்லாம் எல்லா மக்களுக்கும் பொதுவாக உள்ளவை. ஆகவே இத ஞல் மாந்தர் சிறப்புப் பெறுதல் இல்லை. நாணுடை மையே—பழிக்கஞ்சும் பண்பே மக்களுக்குச் சிறப்புத் தருவதாகும். பழிக்கஞ்சாதவர்கள் உயிரோடு வாழ்ந்தாலும் அவர்கள் சூத்திரக் கயிற்ருல் இயக்கப் படும் வெறும் பொம்மைகளே என்கிருர் வள்ளுவர்.

> 'நாண் அகத்தில்லார் இயக்கம் மரப்பாவை
> நாணல் உயிர்மருட்டி யற்று.' (குறள். 1020)

தீவினையச்சம் இல்லையா? பழிக்கஞ்சும் பண்பு இல்லையா? அப்படியாஞல் அவர்கள் உயிரற்றவர் களே! பொம்மலாட்டத்தில் நாம் காணும் பொம் மைகள் உயிருள்ளவைபோல நம்மை ஏமாற்ற வில்லையா? அதுபோலவே நாண் இல்லாத இம்மாந்தர்

களும் தங்களுக்கு உயிரிருப்பதாக நம்மை ஏமாற்று கிருர்கள். அவர்களுக்கு உயிரிருக்கிறதென்பதையே வள்ளுவர் நம்ப மறுக்கிருர். உயிரோடு ஒப்பிடக் கூடிய அளவு நாணுடைமை அத்துணைச் சிறப் பானதாகும்!

**பழிக்கு அஞ்சுவதே வீரம்**

விழியுள்ளவர்களே இருளைக் கண்டு அஞ்சுவர்· விழியில்லாதவர்களுக்கு இருளிடம் பயமேது? அது போல அறிவுள்ளவர்களே பழிக்கு அஞ்சுவர்; அறிவற்ற மூடர்கள் பழிபாவத்திற்கு அஞ்சமாட் டார்கள்.

நன்னெறிப் பாட்டு குருட்டுக் கண்ணுக்கு அச்ச மில்லை என்று அதனைப் பாராட்டுவதுபோல மட்டம் தட்டுகிறது. அச்சமில்லாத பண்பு வீரம். போற்றப் படவேண்டிய பண்பன்ருே அது! 'அச்சமில்லை அச்ச மில்லை' என்னும் பாரதியார் பாட்டு எவர்க்கும் வீரத்தை உண்டாக்கும். இங்கே குருட்டுக் கண் இருளைக் கண்டு 'அச்சமில்லை' என்று கும்மாளம் அடிக்கிறது: மூடர்கள் பழிபாவத்திற்கு நாங்கள் பயப் படோம் என்று வீரமுரசு கொட்டுகிருர்கள். இவர் களின் வீரம் ஒருபுறம்! இன்னெருபுறம் இருளைக் கண்டு அஞ்சும் கண்ணின் கோழைத்தனம்! தீமை யைக் கண்டு விலகியோடுகிற அறிவற்றவர்களின் கோழைத்தனம்!

இந்த வீரம், கோழைத்தனம் இரண்டில் எதனை நீங்கள் தேர்ந்தெடுப்பீர்கள்? நீங்கள் கல்வி பயில்கிற வர்கள்; அறிவுச் செல்வம் ஈட்டுகிறவர்கள். தீமை

யைக் கண்டு, பழியைக் கண்டு நீங்கள் அஞ்சுவது திண்ணம். பழிக்கஞ்சுவது கோழைத்தனமன்று, அதுதான் உண்மையான வீரம்.

அறிவு பெற்றவர்களே கண் பெற்றவர்கள். கண் பெற்றவர்களே இருளுக்கு அஞ்சுவர்! பழிக்கும் அவர்களே நாணுவர். நன்னெறி எடுத்துரைக்கும் உண்மை இதுதான்!

# 10

# மன்னரினும் புலவரே பெரியர்

## நங்கையர்க்கு நகை மோகம்

நகைப்பித்து பெரிது. குறிப்பாக மங்கையர்களை நகைப் பைத்தியங்கள் என்றே சொல்லலாம். மண்ணுசை, பொன்னுசை, பெண்ணுசை என்று மனித தனுக்குள்ள ஆசைகளை அடுக்குவார்கள். நகைகள் பொன்னுசையின் கீழ் வரும். நகை என்னும்போது மாந்தர் அணிந்துகொள்ளும் அணிகலன்களையும் ஆபரணங்களையுமே குறிப்பிடுகிறேம். உலகில் எல்லா நாட்டுப் பெண்களுக்குமே நகை அணிவதில் பெரு விருப்பம் இருக்கக் காண்கிறேம். நம் தமிழ்ப் பெண்கள் உடம்பெல்லாம் ஓர் அங்கம் பாக்கி வைக்காமல் நகை பூட்டி அழகு பார்ப்பதில் வல்லவர்கள். நகைகளைப் பித்தளையில் செய்யலாம்; பொன்னில் செய்யலாம்; பொன்னிலும் வைரத்திலும் செய்யலாம். சாதாரணப் பாசி மாலையும் நகைதான்!

உயரிய முத்துச்சரமும் நகைதான்! அவரவர் செல்வ நிலைக்கேற்பப் பெண்களின் நகை மதிப்பும் அமையும். பெருஞ்செல்வர் வீட்டுப் பெண்கள் நகை பூட்டிய தேர்போலக் காட்சியளிப்பார்கள். நடமாடும் நகைக் கடை என்றுகூட அவர்களை வர்ணிக்கலாம். நகை களில்தான் எத்தனை வகை! ஏதாவதொரு நகைக் கடைக்கு உங்கள் அப்பா, அம்மாவோடு சென்று பாருங்கள். வளையல் என்றால் எத்தனை விதம்! சங்கிலி யில்தான் எத்தனை ரகம்; மோதிரக் கல்லில் எத்தனை வகை! கம்மலில்தான் என்னென்ன புதுமை! நாளெல் லாம் பார்த்துக் கொண்டிருக்கலாம். அதுவே தனி இன்பமாக இருக்கும்.

**நகை அணியாக் கண்**

மங்கைமார்கள், தம் உடம்பெல்லாம் நகை போடவேண்டும் என்று கருதுவார்கள். கைக்கு வளை யல்; விரலுக்கு மோதிரம்; காலுக்குக் கொலுசு; இடுப்புக்கு ஒட்டியாணம்; கழுத்துக்குக் கண்டசரம்; காதுக்குத் தோடு; மூக்குக்கு மூக்குத்தி—நகைகளின் பட்டியல் இன்னும் விரியும். உடம்பில் நகை போட் டுக்கொள்ளாத உறுப்பு ஏதாவது இருக்கிறதா என்று நினைத்துப் பாருங்கள். இருக்கிறது, அதில் ஒன்று கண் கண்ணிற்கு எப்படி நகை அணிவது? அதனால்தான் போலும் மங்கையர்குலம் அதனைச் சும்மா விட்டு வைத்திருக்கிறது.

**கண்ணோடு நிகர் நிற்க முடியாது**

மனிதர்களுக்குக் கண் மிக முக்கியமானது. கண் ணின் சிறப்பைப்பற்றி ஏற்கெனவே நாம் தெரிந்து

கொண்டிருக்கிறோம். கண் மனித உறுப்புக்களில் எல்லாம் தலைசிறந்தது. அதற்கு நிகராக இன்னொன் றைச் சொல்ல முடியாது.

கால், கை, கழுத்து, காது முதலிய பிற உறுப் புக்கள் ஆயிரக்கணக்கான வெள்ளி மதிப்புள்ள நகை களை அணிந்திருக்கின்றன. ஆனால் கண் ஒரு காசு பெறுமானமுள்ள நகைகூடப் போடவில்லை. அப்படி யிருந்தும் கண்ணுக்குள்ள சிறப்பும் மேன்மையும் கைக்கு வருமா? காதுக்கு வருமா? எந்த அவயவமும் கண்ணோடு நிகர் நிற்க முடியாது.

நன்னெறிப் பாட்டு இதனைத்தான் தெளிவாக எடுத்துரைக்கிறது.

**பொன்னணியும் வேந்தர் புனையாப் பெருங்கல்வி**
**மன்னும் அறிஞரைத்தான் மற்றெவ்வார்—மின்னுமணி**
**பூணும் பிறவுறுப்புப் பொன்னே! அதுபுனையாக்**
**காணும்கண் ஒக்குமோ காண்.**

நன்னெறியில் இது கடைசிப் பாட்டு, கல்வியின் சிறப்பை எடுத்துரைத்து மன்னரைவிடக் கற்றோரே பெரியர் என்னும் உண்மையை வலியுறுத்துகிறது.

மின்னும் அணிகலன்களைப் பூணுகின்ற பிற உறுப்புக்கள், கண்ணுக்கு இணையான சிறப்புப் பெறு வதில்லை. அதுபோலவே பொன் நகைகள் அணியும் மற்றவர்கள், அவற்றை அணியாத புலவர்களுக்கு ஒப்பாவதில்லை. கண்ணே மற்ற உறுப்புக்களைவிடச் சிறந்து நிற்கிறது; அதுபோலப் புலவர்களே அரசர் களைவிடச் சிறந்து நிற்கிறார்கள்.

**கல்வியின் சிறப்பு**

கல்வியின் சிறப்பே கற்ருேர்களின் சிறப்பு. 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' அல்லவா? பொன்னின்றி, பொருளின்றிப் பெரிய வாழ்வு நடத்தல் இயலும். ஆனல் கண்ணில்லா வாழ்க்கை நினைக்கமுடியாத அளவு பயங்கரமானது. கண்ணில் லாதவர்கள் வாழ்கிருர்கள், படிக்கிருர்கள், முன் னேற்றம் காண்கிருர்கள். எனினும் கண்ணில்லாத வர்கள் இழக்கும் இன்பம் மிகப் பெரிது. அதனைப் போன்றே கண்ணுக்குச் சமமான கல்வியைப் பெரு தார் நிலையும்.

> 'செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
> அவியினும் வாழினும் என்?' (குறள். 420)

சாப்பாட்டு ருசியைத் தவிர்த்துக் கலை நலங்களில் திளைக்க வகையற்றவர்கள் உயிரோடு இருந்தால் என்ன? செத்தால் என்ன? உலகிற்கு அவர்களால் பயனில்லை. இயற்கையாகவே கண்ணும் காதும் இல்லாதவர்கள் கொடுத்து வைக்காதவர்கள்; நற் பேறு அற்றவர்கள். இரங்கத்தக்கது அவர்களின் நிலை. ஆனல் ஆண்டவன் கொடுத்த கண்ணுங் காதும் இருந்தும், கல்விச் செல்வம் பெருதவர்களை என்னென்று சொல்வது? அவர்கள் கண்ணிருந்தும் குருடர்கள், காதிருந்தும் செவிடர்கள்!

கல்வியின் சிறப்பு இம்மட்டோ! கல்வியே அழி யாத செல்வம். வழங்குந்தோறும் வளர்கின்ற செல்வம் அல்லவா? அச் செல்வத்தைக் குறைவறப் பெற்றவர்கள் புலவர்கள். மன்னர்களோ, கேவலம்

அழியும் செல்வங்களைக் கட்டியாள்பவர்கள். அழியாத செல்வம் பெற்றவர்களைப் பெரியோர் என்பதா? அழியும் செல்வம் உடையோரைப் பெரியோர் என்பதா? புலவர்களே உயர்ந்தவர்கள், மேலானவர்கள்.

**மன்னரும் மாசறக் கற்றோரும்**

'கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு' என்று மூதுரையில் படித்திருக்கிறோம். அரசர்களுக்கு மதிப்பு, வரவேற்பு, அதிகாரம் எல்லாம் அந்தந்த நாட்டு வரம்பிற்குள்தான்; கற்றோர்க்கு அப்படியில்லை. அவர்களை உலகமே இரு கை கூப்பி வரவேற்கும். எல்லா நாட்டிலும் படித்தவர்களுக்கு வரவேற்புண்டு நம் தமிழ் வள்ளுவரை இன்று உலகில் எத்தனை மொழிகளில் ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள்! ஆங்கில நாட்டுப் புலவர் ஷேக்ஸ்பியரை எடுத்துக் கொள்ளுங்கள். இந்தியக் கவிஞர் தாகூரை எடுத்துக் கொள்ளுங்கள். இப்புலவர்களின் சீரும் சிறப்பும் உலக நாடுகளில் எல்லாம் பேசப்படுகின்றன. அரசுரிமை, கடல் எல்லை, வான எல்லை என்ற வரம்புகள் புலவர்க்குக் குறுக்கே நிற்பதில்லை. புலவர்களின் ஆட்சி எல்லையற்றது. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று சொல்வது புலவர்களுக்கு மிகப் பொருந்தும். ஆங்காங்குக் குறுகிய பகுதிகளில் ஆட்சி புரியும் மன்னர்கள் எங்கே? உலகத்தார் உள்ளங்களையெல்லாம் கட்டியாளும் புலவர்கள் எங்கே! புலவர்களே மன்னர்களைவிடப் பெரியவர்கள்!

மன்னர்களின் சிறப்பு அவர்கள் வாழும் காலத்தோடு சரி. பின்னர் வரலாற்றுப் புத்தகங்களில் வேண்டுமானுல் அதனைக் காணலாம். ஆனுல், காலத்தைக் கடந்து நிலையான சிறப்புப் பெறுகின்றவர்கள், புலவர்கள். வள்ளுவரை நாம் நேரில் அறியோம். எனினும் இரண்டாயிரம் ஆண்டுகளாக அவர் உலகத்தார் உள்ளத்தில் நிலைத்துவிட்டார். புலவர் பெருமக்களுக்கே இத்தகைய பெருமையுண்டு. காலம், நாடு, மொழி—இவற்றையெல்லாம் வென்று நிற்பவர்கள் அவர்கள்.

இயற்கையிலேயே அழகர்களாகச் சிலர் பிறக்கக் கூடும். கல்வி நலம் இல்லையேல் அந்த அழகுக்கும் சிறப்பில்லை. அழகாகப் பிடித்துவைத்த தஞ்சாவூர் மண் பொம்மைகளுக்கும் அவர்களுக்கும் என்ன வேறுபாடு? கல்வியறிவில்லாதபோது அழகிய தோற்றமும் பெருமை தருவதில்லை. அப்படியிருக்க, அழகுக்கு அழகு செய்வது போல் உடம்பில் பூட்டும் நகை அலங்காரங்கள் எவ்வாறு சிறப்பைத் தரும்? புலமை ஒளி முன்பு மேனியழகும், அதனை மின்னவைக்கும் நகையழகும் தோற்றுவிடுகின்றன.

## கவிஞர் பாரதிதாசன் கதை

நகைப்பித்து மக்களை எவ்வாறு ஆட்டிப் படைக்கிறதென்பதற்கு உங்களுக்கு ஒரு கதை சொல்ல விரும்புகிறேன். கோவிலுக்கு வருகிற பெண்கள் தங்க, வைர நகைகள் போட்டுவரக் கூடாது; மிகவும் பகட்டான ஆடைகள் அணிந்து வரக்கூடாது என்று ஒரு பாதிரியார் உத்தரவிட்டார். நகை அணியாமல் எப்படிப் பெண்கள் வெளியே கிளம்புவார்கள்? பெண்கள் வேலைநிறுத்தம்

செய்தால்; ஆண்கள் அதனை உடைக்க முடியுமா? கோவிலுக்குப் பெண்களும் வரவில்லை; ஆண்களும் வரவில்லை. பாதிரியார் மட்டும் கோவிலில் இருந்தார்.

இதனைப் பார்த்த பாதிரியார் மறு அறிவிப்புச் செய்தார். தலை, காது, மூக்கு, கழுத்து, கை, மார்பு, விரல், தாள் என்ற எட்டுறுப்பேயன்றி நீள் இமைகள், உதடு, நாக்கு இவற்றிலும் நிறைய நகைகள் போட்டுக்கொண்டு வரலாம். கோவிலில் முகம்பார்க்க நிலைக்கண்ணாடியும் உண்டென்று அறிவித்தார். உடனே பக்தர்கள் கூட்டம் கோவிலில் தள்ளிச் சாய்ந்தது; பாதிரியார் மனம் குளிர்ந்தது; ஆனால் ஏசுநாதர் மட்டும் அங்கே வரவில்லையாம்! இது ஒரு வேடிக்கையான கதை. பெண்களின் நகைப் பைத்தியத்தைக் கேலி செய்யும் கதை. பாரதிதாசன் இக் கதையை இரண்டு சுவையான விருத்தங்களாகப் பாடி வைத்திருக்கிறார்.

பாரதிதாசன் தன் கற்பனையில்கூட இமை, உதடு, நாக்கு இவற்றுக்கு நகை பூட்டியிருக்கிறாரே யொழியக் கண்ணைச் சேர்க்கவில்லை. கண்ணுக்கு அலங்காரமாக மூக்குக் கண்ணாடியை அணியலாம். அதற்குமேல் கண்ணுக்கு அணிகலன்களைப் போட முடியாது.

நகையணியாத கண்ணின் முன்னே, நகையணிந்த எந்த உறுப்பும் பெருமையோடு நிற்கமுடியாது. பொன் அணியும் வேந்தரின் நிலையும் இதுதான். எளிய புலவர்களின் முன்பு, மன்னர்களின் சிறப்பு மிக மங்கிவிடுகிறது.

படித்தவர்கள், மேதைகள், அறிஞர்கள்—இவர்களிடம் பெரும்பாலும் பகட்டான ஆடையலங்காரங்களைக் காணமுடியாது. அவர்கள் உடம்பில் தங்க நகை, இரத்தின மிழைத்த நகை மின்னுவதில்லை. அடக்கமான

எளிய தோற்றமே புலவர்களின் சிறப்பு. ஆனால் மன்னர்களுக்கு ஆடை, அணிகலன் எல்லாம் முறைப்படி அமைய வேண்டும் அவற்றை அணிந்தால்தான் அவர்களுக்குச் சிறப்பு. எளிய புலவர்கள் எங்கே! பொன்னும் மணியும் அணிந்த மன்னர்கள் எங்கே! வெளித்தோற்றத்திற்கு முதல் நினைப்பில் மன்னர்களே பெரியவர்கள் என்று சொல்லத் தோன்றும். ஆனால் அழியாத நிலைத்த செல்வமான கல்விக்கு உரிமையாளர்களான புலவர்களே உயர்ந்தோர் என்பதில் ஐயத்திற்கு இடமில்லை.

கல்வியின் உயர்வே புலவர்களின் உயர்வு; கல்வியே அவர்களுக்கு அணிகலன். கற்றறிந்த புலவர்களை நோக்க அரசர்கள் மிக மிக எளியராகி விடுகிறார்கள்.

ஆசிரியர் முருகு சுப்பிரமணியன் அவர்களின்

## தீந்தமிழ் நூல்கள்

நீதி வெண்பாவின் நெறிமுறைகள்

நன்னெறி நூல் நயம்

தமிழ் கூறும் நல்லுலகம்

மூதுரை விளக்கம்

நல்வழி விருந்து

பாரதியும் பாரதிதாசனும்

தமிழகத்தில் கிடைக்குமிடம் :

**பாரி நிலையம்**
**59, பிராட்வே**
**சென்னை– 1**

மலேசியாவில் கிடைக்குமிடம் :

**முருகு வெளியீடுகள்**
CC-3, IPOH ROAD GARDEN
4th MILE IPOH ROAD
KUALA LUMPUR
(MALAYSIA)

*Jacket Printed at Neo Art Press, Madras - 2*